Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

TUESDAY, NOVEMBER 21, 2023

செவ்வாய்க்கிழமை நவம்பர் 21, 2023 | ஒளி: 09 கதிர் 132 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

# சாப்பாடு கொடுக்காது: மது கொடுத்து தலைகீழாக தொங்கவிட்டு அடித்தனர்

### மரணிக்கும் முன் சித்தங்கேணி இளைஞன் கூறியுள்ளார்



■ பு.கஜிந்தன்

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் என்ற இளைஞன் சிறைச்சாலையில் இருந்து யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை, ஞாயிற்றுக்கிழமை (20) உயிரிழந்தார். நகை திருட்டு சம்பவம் ஒன்றுடன் தொடர்புபட்டவர் என்ற ரீதியில் அவரை கைது செய்த வட்டுக்கோட்டை பொலிஸார், பல சித்திரவதைகளை பொலிஸ் நிலையத்தில் வைத்து செய்துள்ளனர் என உயிரிழக்கும் முன்னர் அவ்விளைஞன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஞாயிறன்று சபை கூடும்

பெறுமதி சேர் வரி (VAT) திருத்தம் மற்றும் பணச் சட்டமூலங்கள் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை அடுத்த மாதம் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடத்துவதற்கு பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு திங்கட்கிழமை (20) தீர்மானித்துள்ளது.

## வடக்கு, கிழக்குக்கு பட்ஜெட்டில்

# “0.1 சதவீதமே ஒதுக்கீடு”

### வரவு–செலவுத் திட்டத்திலும் வடக்கு, கிழக்கு முற்றாக புறக்கணிக்கப்பட்டது

### ரணில் பாரியதொரு நாடகத்தினை நடத்தியே ஆட்சியை பொறுப்பேற்றார்



யுத்தத்தினால் 30 வருடங்களாக மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மக்கள் கொரோனாவாலும் அதன் பின்னர் பொருளாதர நெருக்கடியினாலும் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், 2024ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்திலும் இந்த மக்கள் முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளார். இந்த பட்ஜெட்டின் மொத்த நிதியில் 0.1 வீதமே வடக்கு, கிழக்கிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (20) இடம்பற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீதான 6 ஆம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## வெளி நபர்களுக்கு கதவடைப்பு



பாராளுமன்றத்தில் தற்பொழுது செயற்படும் பல்வேறு குழுக்களின் கூட்டங்களில் வெளிநபர்கள் பங்கேற்க அனுமதியில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பாராளுமன்றத்தில், திங்கட்கிழமை (20) அறிவித்தார்.

தொடர்ச்சி P2

## “ஷம்மிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும்”



நாட்டை காட்டிக்கொடுக்கும் கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வாவிற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன், கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடியாளர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் எனவும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

## தரமற்ற தடுப்பூசி: மேலும் நால்வர் கைது

### வைத்தியர் விஜித் குணசேகர உள்ளிட்ட 10 பேரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டனர்

தரமற்ற நுண்ணுயிர் எதிர்ப்பு தடுப்பூசிகளை அரச வைத்தியசாலைக்கு விநியோகித்த சம்பவம் தொடர்பில், மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் சுகாதார அமைச்சின் வைத்திய விநியோக பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் கபில விக்ரமநாயக்க, கணக்காளர் உள்ளிட்ட நால்வர், குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வு பிரிவின் விசேட விசாரணை பிரிவு ஒன்றின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜயந்த பயகலவின் விசேட குழு, அமைச்சுக்குச் சென்று இவர்களை கைது செய்துள்ளது.

கைது செய்யப்பட்ட நால்வரிடமும் வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டு, மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## 200 மலையகம்: நுரரெலியில் டிசெம்பர் 24இல் நடைபெறும்



மலையகத்தமிழர்கள் இலங்கைக்கு வருகைத்தந்து 200 வருடம் நிறைவடைந்துள்ளது. இந்நிகழ்வை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி நுவரெலியாவில் கொண்டாட தீர்மாணித்துள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## புலிகளின் சின்னங்களை பயன்படுத்தக் கூடாது



■ மு.தமிழ்ச்செல்வன்மா

வீரர் நாள் நிகழ்வுகளில் விடுதலைப்புலிகளின் சின்னங்கள், அவர்களின் அடையாளர்கள் எவற்றையும் பயன்படுத்தக் கூடாது என கிளிநொச்சி பொலிஸார் அறிவுறுத்தியதாக தமிழ்த்தேசிய இளைஞர் பேரவையின் தலைவர் வ. நகுலன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு தன்னையும் தமிழ்த்தேசிய இளைஞர் பேரவையின் பொதுச் செயலாளரமான ச. கீதனையும் ஞாயிற்றுக்கிழமை (19) அழைத்து விசாரணைக்கு உட்படுத்திய பின்னரே இவ்வாறு அறிவுறுத்தினர் என்றார்.

தொடர்ச்சி P2

## “ரங்காவுக்கு பிணை வழங்க நடவடிக்கை எடுக்கவும்”

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தயாசிறி, கூட்டாக கோரிக்கை

### மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு சென்றால் நீதிவான் நீதிமன்றத்துக்கு செல்லுமாறு தெரிவிக்கப்படுகிறது



வாகன விபத்து தொடர்பான குற்றஞ்சாட்டில் சிறை வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் எம்.பி.யான ஸ்ரீரங்காவுக்கு பிணை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டுமென தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுயாதீன எதிரணி எம்.பி.யான தயாசிறி ஜயசேகர ஆகியோர் சபையில் வலியுறுத்தினர்.

தொடர்ச்சி P2

## “யுத்த வெற்றியைக் கொண்டு மோசடிகளை மூடி மறைக்காதீர்”



ராஜபக்ஷக்கள் யுத்தத்தை நிறைவு செய்ததால் அவர்கள் நாம் மீது வெறுப்புக் கொண்டுள்ளதாக கூறப்படுகின்றது. யுத்தத்தை நிறைவு செய்து விட்டு ஊழல் மோசடி செய்து நாட்டை சுத்தமாக்கியமை தொடர்பிலேயே நாம் வெறுப்படைந்துள்ளோம். எனவே, யுத்த வெற்றியைக் கொண்டு மோசடிகளை மூடி மறைக்க வேண்டாம் என ஜே.வி.பி. தலைவரும் எம்.பியுமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## வட்டுக்கோட்டைக்கு எஸ்.ரி.எப் பாதுகாப்பு

### நூற்றுக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளதுடன், விசேட அதிரடிப் படையினரும் களமிறக்கப்பட்டுள்ளனர்

■ பு.கஜிந்தன்



வட்டுக்கோட்டை பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளாகி, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற நிலையில் உயிரிழந்த நாகராசா அலெக்ஸ் என்ற இளைஞன், ஞாயிற்றுக்கிழமை (19) உயிரிழந்தார். அவர் உயிரிழக்கும் முன்னர் வழங்கிய மரண வாக்குமூலத்தில் பொலிஸார் செய்த பல சித்திரவதைகள் அம்பலமாகின.

தொடர்ச்சி P2

## “பன்றிகளின் அழைப்பை சிங்கமான நான் ஏற்கேன்”

### பன்றியுடன் மோதினால் அதன் மீதுள்ள மலம் தன்மீதும் ஒட்டிக் கொள்ளும்



மலக்குழிக்குள் விழுந்துள்ள பன்றிகளின் சண்டைக்கான அழைப்பை சிங்கமான நான் ஏற்க மாட்டேன். அதேவேளை, என் மீது சுமத்தப்பட்டுள்ள பாலியல் வன்முறை குற்றச்சாட்டை நிரூபித்தால் பாராளுமன்ற உறுப்புரிமையை துறப்பேன் என கோப் குழுவின் தலைவரும் பொதுஜன பெரமுன எம்.பி.யுமான பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## வற்வரி அதிகரிப்பால் விலைகள் எகிறும்

### வரவு–செலவுத் திட்ட வாக்கெடுப்பிற்கு எதிராக வாக்களிக்க வேண்டும்



வற் வரியை 18 சதவீதமாக உயர்த்துவது, நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் மிகவும் ஏழ்மையாக்குவதாகவும், டீசல் மற்றும் பெட்ரோல் மீது முதல் முறையாக வற் வரி விதிப்பதால், அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் உயரும் என்று சுதந்திர மக்கள் பேரவையின் செயற்குழு உறுப்பினரான பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், திங்கட்கிழமை (20) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## சாப்பாடு கொடுக்காது: மது கொடுத்து தலைகீழாக தொங்கவிட்டு அடித்தனர்

களவு சம்பவம் குறித்து சந்தேகத்தின் பேரில் கொண்டு சென்ற வட்டுக்கோட்டை பொலிஸார் கட்டித்தூக்கி விட்டு அடித்தார்கள்.

"முகத்தில் துணியைக் கட்டி விட்டு தண்ணீர் ஊற்றி ஊற்றி அடித்தார்கள். தொண்டையால் சாப்பாடு இறங்குதில்லை. கொஞ்சமாகத் தான் சாப்பிட முடிகிறது. சாப்பாட்டிற்கு மனமே இல்லாமல் உள்ளது" என்றும் அவ்விளைஞன் தெரிவித்துள்ளார்.

பின்னர் நிலத்தில் இருந்து இரண்டு முழம் உயரத்தில் தலைகீழாக கட்டித் தூக்கிவிட்டு, கையை பின்பக்கமாக கட்டிவிட்டு கேட்டு, கேட்டு கொடூரமாக தாங்கினார்கள். நான் களவு எடுக்கவில்லை என்று கூறினேன். பின்னர் பெற்றோல் பையினுள் போட்டுவிட்டு தாக்கினார்கள். நான் மயங்கிவிட்டேன். இரண்டு கைகளும் தூக்க முடியாமல் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் நிலையத்தில் முதல் நாள் சாப்பாடு தரவில்லை. அடுத்தநாள் சாப்பாடு தரவில்லை. அவர்களது அறைக்குள் அழைத்துச் சென்று, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு போடக்கூடாது, யாருக்கும் சொல்லக்கூடாது என்று மிரட்டினார்கள்.

பின்னர் அடுத்த நாளும் பயமுறுத்தினார்கள். மதுவைக் கொடுத்து குடிக்குமாறு கூறினார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

## தரமற்ற தடுப்பூசி: மேலும் நால்வர் கைது

தரமற்ற நுண்ணுயிர் எதிர்ப்பு தடுப்பூசி விவகாரம் தொடர்பில் தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபையின் முன்னாள் பிரதான நிறைவேற்று அதிகாரியான வைத்தியர் விஜித் குணசேகர உள்ளிட்ட 10 பேரிடம் வாக்குமூலங்கள் பெற்றுக்கொண்டனர்.

நிறைவேற்று பணிப்பாளரிடம் மட்டும், பல சந்தர்ப்பங்களில் வாக்குமூலங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## "0.1 சதவீதமே ஒதுக்கீடு"

யுத்தத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட மாகாணங்களாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளன. ஆனால், யுத்தம் முடிந்த பின்னர் இன்று வரை விசேட தேவையுடைய மாகாணங்களாக வடக்கு, கிழக்கு அறிவிக்கப்படவில்லை. வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பொருளாதாரங்களும் பாதுகாக்கப்படவில்லை. நாட்டின் ஏனைய மாகாணங்களுக்கு சமாந்தரமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கணிக்கப்பட்டு பெரும் அநீதி இழைக்கப்படுகின்றது.

மைத்திரி -ரணில் ஆட்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது. ஆனால், அந்த நல்லாட்சி வரவு -செலவுத் திட்டத்திலும் வடக்கு, கிழக்கு முற்றாக புறக்கணிக்கப்பட்டது. சர்வதேச உதவி வழங்குவோர் மாநாட்டை நடத்தி அதன் மூலம் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி செய்யப்படுமென உறுதி வழங்கப்பட்டது ஆனால், அதற்குள் 52 நாள் ஆட்சி மாற்றம் வந்ததால் எதுவும் நடக்கவில்லை.

அதேவேளை, கடந்த 15 வருட வரவு செலவுத் திட்டங்களுடன் ஒப்பிடுகையில் சில முன்னேற்றகரமான விடயங்களும் இதில் உள்ளன. அவற்றை நாம் வரவேற்றுத்தானாக வேண்டும், பூநகரித்திட்டம், பாலியாறு குடிநீர் திட்டம். மீள்குடியேற்றம், வீடமைப்புத் திட்டம், காணாமல்போனோருக்கான ஒதுக்கீடுகள் என சில விடயங்கள் முன்வைக்கப்பட்டிருந்தாலும் இவை நடந்தேறுமா என்றபலமான சந்தேகம் எமக்குள்ளது.

ரணில் விக்ரமசிங்க பாரியதொரு நாடகத்தினை நடத்தியே ஆட்சியைப்பொறுப்பேற்றார். அதன் பின்னர் அனைத்துக்கட்சி மாநாட்டை நடத்தினார். நாம் அதில் பங்கேற்கவில்லை. அதில் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம், காணி, பொலிஸ் அதிகாரம் தொடர்பில் தமிழ் கட்சிகளுக்கு வாக்குறுதி வழங்கினார். ஆனால், இன்றுவரை எதுவும் நடைபெறவில்லை என்றார்.

## வெளி நபர்களுக்கு கதவடைப்பு

குழுவின் தலைவரின் முறையான அனுமதிக்கமைய வருகைதரும் குழுவின் உறுப்பினர்களல்லாத பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட குழுக்களின் பணிகளுக்காக அழைக்கப்பட்டுள்ள ஏனைய நிறுவனங்களின் அதிகாரிகளுக்கும் குறித்த குழுவில் பணியாற்றும் பாராளுமன்ற பணியாளர்களின் அதிகாரிகளுக்கும் மாத்திரம் அந்தக் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ள முடியும் என்றார்.

இதற்கு மேலதிகமாக, குழுக்களின் தலைவர்கள் தமது விடயங்களுக்கு அப்பால் குழுக்களின் பணிகளை மேற்கொள்வதன் போக்கு தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதால், அவை தொடர்பிலும் பாராளுமன்றத்தில் காலகாலமாகப் பின்பற்றப்பட்டுவரும் சம்பிரதாயங்கள் மற்றும் நடைமுறைகள் பாதுகாக்கப்படும் வகையில் செயற்படுவதற்கு அனைத்துக் குழுக்களின் தலைவர்களும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கு அமைய கடப்பாடுடையவர்கள் என்பதையும் வலியுறுத்தினார்.

## வற்வரி அதிகரிப்பால் விலைகள் எகிறும்

நாவலையிலுள்ள சுதந்திர மக்கள் பேரவையின் பிரதான காரியாலயத்தில் திங்கட்கிழமை (20) இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட ஆவணத்தின் தலைவிதியை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்கப்படும் என தெரிவித்த பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், பொதுஜன பெரமுனவின் பலம் வாய்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் வரவு -செலவுத் திட்ட ஆவணத்தை பகிரங்கமாக விமர்சித்தாலும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கு வரவு- செலவுத் திட்ட வாக்கெடுப்பில் எதிராக வாக்களிக்க வேண்டும் எனவும் பீரிஸ் கேட்க்கொண்டார்.

அரச ஊழியர்களின் சம்பளம் ஏப்ரல் மாதம் அதிகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதால் அது எதிர்கால எதிர்பார்ப்பு எனவும் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையை ஈடுகட்ட, வரி விதிப்பது, வெளிநாட்டுக் கடன் வாங்குவது, வளங்களை விற்பது ஆகியவற்றைத் தவிர வேறு தீர்வுகள் அரசிடம் இல்லை என்றும், உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு என்ற பெயரில் ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதியை மட்டுமே ஆக்கிரமித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

## "பன்றிகளின் அழைப்பை சிங்கமான நான் ஏற்கேன்"

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (20) சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

நான் சபையில் இல்லாத நேரத்தில் எனது பாராளுமன்ற சிறப்புரிமையை மீறும் வகையில் எதிர்க்கட்சியினர் பல பொய்யான குற்றச்சாட்டுக்களை எனக்கு எதிராக முன்வைத்துள்ளார்கள். இந்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் நான் முழுமையாக நிராகரிக்கிறேன்.

என் மீதான குற்றச்சாட்டுக்களில் ஒன்றாக ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான ஹேஷா விதானகே என் மீது பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். இது முற்றிலும் அடிப்படையற்றது.

ஆகவே இந்த குற்றச்சாட்டுத் தொடர்பில் பாராளுமன்ற சிறப்புரிமைகள் மற்றும் ஒழுக்கவியல் குழு ஊடாக விசாரணை செய்ய வேண்டும். நான் கடினமான முறையில் உயர்வடைந்துள்ளேன். சாதாரண தர பரீட்சை எழுதாமல் வெளிநாட்டுக்குச் சென்று படிக்கவில்லை. அதற்கான வசதியும் என்னிடம் இருக்கவில்லை.

மலகுழிக்குள் விழுந்த பன்றி சிங்கத்தைச் சண்டைக்கு அழைக்கும் போது, சிங்கம் அதனுடன் சண்டைக்கு செல்வதில்லை. பன்றியுடன் மோதுவதற்கு சிங்கம் அச்சமடைவதில்லை. ஆனால் பன்றியுடன் மோதினால் அதன் மீதுள்ள மலம் தன்மீதும் ஒட்டிக் கொள்ளும் என்பதால் சிங்கம் விலகிச் செல்லும். ஆகவே சிங்கமான எனது பொறுமையைப் பலவீனமாகக் கருத வேண்டாம் என்றார்.

## வட்டுக்கோட்டைக்கு எஸ்.ரி.எப் பாதுகாப்பு

இந்நிலையில், பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்பு கருதி சுன்னாகம், மானிப்பாய், இளவாலை, யாழ்ப்பாணம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் இருந்து நூற்றுக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளதுடன், விசேட அதிரடிப் படையினரும் களமிறக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு எட்பட்ட பகுதிகளில் பதற்றம் நிலவுகிறது.

உயிரிழந்த இளைஞனுக்கு நீதி வழங்காமல் கண்துடைப்பாக சம்பவத்துடன் தொடர்புபட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் வெறுமனே இடமாற்றம் வழங்கிவிட்டு பொலிஸார் தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது விசனத்தை ஏற்படுத்தியுள்ளது

## 200 மலையகம்: நுரளையில் டிசெம்பர் 24இல் நடைபெறும்

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், மலையகத் தமிழர்கள் மலையகத்துக்கு வருகைத்தந்து 200 வருடங்கள் கடந்துவிட்டன. அந்த 200 வருடத்தில் மலையகம் அடைந்துள்ள அபிவிருத்தி, மலையகத்தில் உருவாகியுள்ள சாதனையாளர்கள், உட்பட மலையகத்துக்காக பாடுபட்டவர்கள் என ஒவ்வொரு துறைசார்ந்தும் கௌரவிக்கப்படவுள்ளனர் என்றார்.

200 வருடத்தில் மலையகம் எத்தனை எத்தனை சாதனைகளை படைத்துள்ளது. எத்தனை சாதனையாளர்களை உருவாக்கியுள்ளது எற்பதை எதிர்வரும் டிசெம்பர் 24ஆம் திகதி நுவரெலியாவில் பார்க்க முடியும் எனவும் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

## "ரங்காவுக்கு பிணை வழங்க நடவடிக்கை எடுக்கவும்"

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (20) விசேட கூற்றொன்றை முன்வைத்த சுயாதீன எதிரணி எம்.பி.யான தயாசிறி ஜயசேகர இது தொடர்பாக தெரிவிக்கையில், சாட்சியாளர்களை பாதுகாக்கும் சட்டம் இந்த சபையில் அனுமதிக்கப்பட்டு, சபாநாயகராகிய நீங்கள் அதில் கைச்சாத்திட்டிருந்திருந்தீர்கள்.

இதுவரை காலமும் ஒருவருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் ஊடாக பிணை பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்தது. குறித்த சட்டத்தின் பிரகாரம் நீதிவான் நீதிமன்றம் ஊடாக பிணை பெற்றுக்கொள்ள முடியுமானது. அதன் பிரகாரம் வாகன விபத்து குற்றச் சாட்டில் சிறை வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் எம்.பி.யான ஸ்ரீரங்கா பிணை பெற்றுக்கொள்வதற்காக நீதிவான் நீதிமன்றத்துக்கு பல தடவைகள் சென்றுள்ளார்.

ஆனால், இந்த பிணையை மேன்முறையீட்டு நீதிமன்றிலேயே பெற்றுக் கொள்ள முடியும் என அவருக்கு அங்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு சென்றால் நீதிவான் நீதிமன்றத்துக்கு செல்லுமாறு தெரிவிக்கப்படுகிறது. இந்த சட்டத்துக்கு நீங்கள் கைச்சாத்திட்ட பின்னர் நீதி அமைச்சர் அதில் கைச்சாத்திடவில்லை என தெரிவித்து, அவர் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார்.

அதேநேரம் சாட்சியாளர்களை பாதுகாக்கும் சட்டத்துக்குக் கீழ்

> **ஸ்ரீரங்கா விடயத்தில் விசேட சட்டத்தரணி ஒருவரை சட்டமா அதிபர் திணைக்களம் நியமித்திருக்கிறது. இது ஒருபோதும் இடம்பெறாத ஒன்று**

கைதுசெய்யப்பட்டிருந்த அனைவரும் தற்போது விடுதலை செய்யப் பட்டிருக்கின்றனர். ஆனால், முன்னாள் எம்.பி.ஸ்ரீரங்காவுக்கு பிணை வழங்கும் செயற்பாடு இழுத்தடிக்கப்பட்டு வருவதால் கடந்த 8 மாதங்களாக அவர் சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார். இது அவரின் மனித உரிமை மீறலாகும். அதனால் இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த தமிழ் தேசிய மக்கள் முன்னையின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. கூறுகையில், முன்னாள் எம்.பி. ஸ்ரீரங்கா வாகன விபத்தொன்றுக்காகவே சிறை வைக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு பிணை வழங்கும் செயற்பாட்டில் இழுத்தடிப்பு செய்யப்படுகின்றது.

சட்டமா அதிபர் திணைக்களம் விசேட சட்டத்தரணி ஒருவரை அவரின் விடயத்தில் நியமித்திருக்கிறது. இது ஒருபோதும் இடம்பெறாத ஒன்று. ஸ்ரீரங்கா உயர் குருதி அழுத்த நோய்க்கு ஆளாகி இருக்கிறார்.

அவரைப்பார்க்க அவரது தாய் வெளிநாட்டில் இருந்து வந்திருக்கிறார். எனவே அவரது விடயம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

## யுத்த வெற்றியைக் கொண்டு மோசடிகளை மூடி மறைக்காதீர்

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (20) இடம்பற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் மீதான 6 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் பொருளாதார ரீதியில் எடுத்த தீர்மானங்கள் பொருளாதார பாதிப்பைத் தீவிரப்படுத்தின. ஆனால் எந்த அரசாங்கங்களும் நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளவில்லை. அதனால்தான் 2019ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் பொருளாதார ரீதியில் எடுத்த தீர்மானங்கள் தற்போதைய பொருளாதார பாதிப்புக்கு ஒரு காரணியாக உள்ளது என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கும் போது குற்ற ஒப்புதல் வழங்கும் கலாசாரம் தற்போது கா ணப்படுகிறது. 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த கால தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

ஊழல் மோசடியால் நாடு வங்குரோத்தடைந்தது என்பது அனைவரும் அறிந்த விடயம் அரசாங்கத்தின் பல செயற்பாடுகளில் ஊழல் மோசடி காணப்படுவதாக நீதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், அதற்கு எதிராக எவ்வித நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை என்றார்.

## புலிகளின் சின்னங்களை பயன்படுத்தக் கூடாது

மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளில் விடுதலைப்புலிகள் பயன்படுத்திய சின்னங்கள் எவையும் பயன்படுத்தக் கூடாது என பொலிஸார் தெரிவித்ததாகவும் குறிப்பாக கார்த்திகை பூவை கூட பயன்படுத்தக் கூடாது என்றும் தமக்கு தெரிவிக்கப்பட்டது. ஆனாலும், தாம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் நகுலன் தெரிவித்தார்.

## "ஷம்மிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும்"

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (20) விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு வலியுறுத்தினார்.

இலங்கை கிரிக்கெட் சபையில் 11-11- 2023இல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது "இலங்கை கிரிக்கெட்டுக்கு தடை விதிக்குமாறு நீங்கள் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலிடம் கோரிக்கை விடுத்தீர்களா ?" என ஊடகவியலாளர்கள் கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வாவிடம் கேள்வி எழுப்பிய போது, "தடை விதிக்குமாறு பரிந்துரைக்கும் அளவுக்கு நான் பலமானவர் அல்ல" என்று ஷம்மி சில்வா பதிலளித்தார்.

இந்நிலையில், கிரிக்கெட் விவகாரம் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில், கிரிக்கெட் சபையின்

> **விளையாட்டுத்துறை அமைச்சருக்கு நெருக்கமானவர்கள் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள் என ஷம்மி சில்வா சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலிடம் கடிதம் ஊடாக முறையிட்டுள்ளார்**

தலைவர் ஷம்மி சில்வா நாட்டின் சட்டத்துக்கு முரணாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலுக்கு கடந்த 6,7 ,9 ஆகிய திகதிகளிடம் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

2023.11.06ஆம் திகதி அனுப்பிய கடிதத்தில் "கிரிக்கெட் இடைக்கால குழு நியமிக்கப்பட்டுள்ளது. விளையாட்டுத்துறை அமைச்சருக்கு நெருக்கமானவர்கள் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்" என ஷம்மி சில்வா சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலிடம் கடிதம் ஊடாக முறையிட்டுள்ளார்.

சித்தங்கேணி இளைஞனுக்கு

# “நீதி வேண்டும்”

புகழிந்தன்

பொலிஸாரின் தடுப்புக்காவல்களில் இடம்பெற்ற கொலைகளில் இறந்தவர்களுக்கான நீதி எந்தவோர் இடத்திலும் நிலைநாட்டடபடவில்லை. இந்த இடத்திலும் நீதி நிலைநாட்டடப்படாது போய்விடும் என்ற அச்சம்தான் எமக்கு எழுகின்றது என்று தெரிவித்துள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், பொலிஸ் திணைக்களத்தினை தமிழ் மக்கள் தமக்குரிய பாதுகாப்பான திணைக்களமாக ஒரு பொழுதும் கருதியது கிடையாது. அந்த பொலிஸ் திணைக்களம் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கின்ற ஒருதிணைக்களமாக தான் தமிழ் மக்கள் பார்த்து வருகின்றார்கள் என தெரிவித்துள்ளார்.

மேலும், தமக்கு பிச்சை போடுகின்ற ஏவாலாளர்களின் கட்டளையினை நிறைவேற்றுகின்ற திணைக்களமாக தான் மக்கள் பொலிஸ் திணைக்களத்தை அவதானித்து வருகின்றார்கள். அவ்வாறானதொரு திணைக்களம், தமிழ் மக்களின் நீதியை நிலைநாட்டும் என்பதில் எந்த ஒரு துளியும் நம்பிக்கை இல்லை. இந்த சம்பவத்தில் தெட்டத்தெளிவாக அவர் உயிரிழப்பதற்கு முதல் வழங்கிய வாக்குமூலம் சரி உறவினர்களின் வாக்குமூலம்சரி அனைத்துமே அவர் பொலிஸாரது தடுப்பு காவலில் அவர் சித்திரவதை செய்யப்பட்டார் என்பதில் சந்தேகதிற்கிடமின்றி காணப்படுகின்றது என்றும் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



இங்கே பொலிஸார் இருவர் விசாரணைக்காக இடமாற்றம் செய்யபடுதல் என்பது ஒரு வழமையான விடயம்.

அதாவது விசாரணைக்கான ஆரம்ப நடைமுறை விடயம்.

ஆனால் இங்கே ஒரு சம்பவத்தின் அதிரவலை எழுகின்ற பொழுது அதன் கண்துடைப்புக்காக நகர்த்தி விட்டு பின்னர் மக்கள் அதனை கடந்து செல்லுகின்ற பொழுது அதனை அப்படியே பேசாது விடுகின்றமையே இங்கே நடந்து வருகின்றது.

அதாவது தண்டனையிலிருந்து தப்பிக்கும் கலாசாரத்தினை தான் பொலிஸ் திணைக்களம் செய்துவருகின்றது.

இந்த விடயத்தில் நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகவே நாங்கள் போராட முனைகின்றோம் என்றும் தெரிவித்துள்ளார்.

நீர் வழங்கல் நடவடிக்கைகளுக்கு

# ஆசிய அபிவிருத்தி வங்கி ஆதரவு

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழ் இந்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள நீர் வழங்கல் துறையின் புதிய மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பான ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இந்த மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கொள்கைத் திட்டமிடல் மற்றும் கண்காணிப்புக் கட்டமைப்பு பற்றி இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

காலநிலைக்கு ஏற்ற, பாதுகாப்பான மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக நிலையான நீர் வழங்கல் கட்டமைப்பு முகாமைத்துவத்தை வலுப்படுத்துதல் மற்றும் நீர் செயல்பாடுகளின் கட்டுப்பாடு, நிலைத்தன்மை, செயல்திறன், தாங்கும் திறன் மற்றும் கொள்ளளவு தொடர்பாக கொள்கைக் கட்டமைப்பை வலுப்படுத்துதல் ஆகிய விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கி இந்த மறுசீரமைப்புப் பணிகளை



முன்னெடுப்பது குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட் டுள்ளது.

இந்தத் திட்டம் பிரதமர் அலுவலகம், நீர் வழங்கல் அமைச்சு மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை ஆகியவற்றால் செயல்படுத்தப்படவுள்ளது.

அமைச்சர் ஜீவன் தொண்டமான், பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.டபிள்யூ.எஸ்.சமரதிவாகர உட்பட அதிகாரிகள், ஆசிய அபிவிருத்தி வங்கியின் உள்நாட்டுப் பணிப்பாளர் டகபுமி கடோனோ (Takafumi Kadono) மற்றும் அதன் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

# தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற பஸ் விபத்து

பதுளை - அலுகொல்ல ஊடாக கந்தேகெதர வீதியில் இயங்கிக்கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று திங்கட்கிழமை (20) கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஸ்பிரிங்வெலி நகரில் உள்ள தேயிலைத் தோட்டத்திற்கு தொழிலாளர்களை ஏற்றிச் சென்றபோதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் பஸ்ஸில் பயணித்த 12 தோட்டத் தொழிலாளர்கள்



காயங்களுக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பஸ்ஸின் பிரேக்கிங் சிஸ்டத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.



# லொறியொன்று சுரங்கப்பாதையில் மோதி விபத்து

ரஞ்ஜித் ராஜபக்ஷ

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் லொறியொன்று சுரங்கப்பாதையில் மோதுண்டு விபத்துக்குள்ளான சம்பவம் திங்கட்கிழமை (20) பதிவாகியுள்ளது.

தலவாக்கலையிலிருந்து அகரபத்தன நோக்கி சென்று கொண்டிருந்த லொறியொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் லொறியின் சாரதிக்கு காயம் ஏற்படவில்லையென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், குறித்த பகுதியில் மண்மேடுகள் சரிந்துவிழும் அபாயம் காணப்படுவதால் வாகன சாரதிகள் அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு ஹட்டன் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# திருமணமாகாத அழகு ராணியாக காரைதீவு நிவேதிகா தெரிவு

வி.ரி.சகாதேவராஜா

அம்பாறை மாவட்டம் காரைதீவைச் சேர்ந்த நிவேதிகா இராசையா திருமணமாகாத அழகு ராணியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கனேடிய அமைப்பொன்று இலங்கையில் முதன்முதலாக இந்த போட்டியை கடந்த மூன்று மாத காலமாக நடத்தியது.

கொழும்பில் நடைபெற்ற இந்த தெரிவில் முதல் சுற்றில் நாடளாவிய ரீதியில் இருந்து சுமார் 120 பெண்கள் பங்குபற்றியுள்ளனர். இறுதிச்சுற்றில் 15 பேர் கலந்து கொண்டுள்ளனர்.

அதில் முதலாவது இடத்தில் நிவேதிகா இராசையாவும், இரண்டாவது இடத்தில் ஆச்சர்யா யோகராஜனும், மூன்றாவது இடத்தில் சந்திரகுமார் விதுர்ஷாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.





# 3 கோடி மதிப்புள்ள கேரளா கஞ்சா மீட்பு

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் சுமார் 3 கோடி ரூபாய் மதிப்புள்ள கேரளா கஞ்சா தொகை திங்கட்கிழமை (20) மீட்கப்பட்டுள்ளது.

காங்கேசந்துறை-கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் காரைநகர் சாம்பலோடை சிவகாமி அம்மன் ஆலய வீதியில் உள்ள-பற்றைக்காட்டில் இருந்து 101 கிலோ 750 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் பெறுமதி சுமார் 3 கோடி ரூபாய் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் காங்கேசந்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





# உரிமையைக் கேட்டு வீதிக்கு இறங்கிய தோட்ட தொழிலாளர்கள்

ஆ.ரமேஸ்.

இராகலை மத்திய பிரிவு தோட்ட தொழிலாளர்கள் தமக்கான வீட்டு உரிமையைக் கேட்டு இராகலை நகரில் வீதிக்கு இறங்கி அமைதி பேரணியுடன் திங்கட்கிழமை (20) போராட்டம் ஒன்றில் ஈடுப்பட்டுள்ளனர்.

இராகலை மத்திய பிரிவு தோட்டத்தில் கடந்த 05.07.2023 அன்று 20 வீடுகளைக் கொண்ட தொடர் குடியிறுப்பு திடீர் தீ விபத்துக்குள்ளாகி முற்றாக எறிந்து நாசமாகியது.

இந்த தீ விபத்து சம்பவத்தில் 20 வீடுகளில் 18 வீடுகள் முற்றாக எறிந்துள்ளதுடன் இதில் வசித்து வந்த 18 குடும்பங்களை சேர்ந்த 75 பேர் நிர்க்கதிக்குள்ளாகி இத்தோட்டத்தில் செயலிழந்துள்ள தோட்ட வைத்தியசாலை கட்டடத்தில் அடிப்படை வசதி குறைபாடுகளுடன் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இவ்வாறு தங்கியுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பது

**“பாதுகாப்பான இடத்தில் தனி வீடுகளை அமைத்து அதில் குடியமர்த்துவதற்கு அரசாங்கம் மற்றும் இன்றைய ஆட்சியில் உள்ள தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்**

தொடர்பில் எத்தகைய முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் தோட்ட நிர்வாகம் மற்றும் அமைச்சர்கள் எடுத்ததாகத் தெரியவில்லை.

இருப்பினும் அங்கு ஏற்பட்ட தீயினால் முற்று முழுதாக பாதிக்கப்பட்டுள்ள லயன் குடியிருப்பினை திருத்தி பாதிக்கப்பட்டுள்ள மக்களை அதில் குடியமர்த்த நடவடிக்கை எடுத்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நடவடிக்கையை எதிர்த்துள்ள மக்கள், தங்களுக்குப் பாதுகாப்பான இடத்தில் தனி வீடுகளை அமைத்து அதில் குடியமர்த்த அரசாங்கம் மற்றும் இன்றைய ஆட்சியில் உள்ள தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.



# மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் வீதிக்கு வந்த சமையலறை

மெய்யன்

கண்டி - பன்விலை ஆத்தளை பிரதேசத்தில் சனிக்கிழமை (18) மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் வீடொன்றின் சமையலறைப் பகுதி வீதிக்கு வந்துள்ளது.

மண்சரிவினால் விட்டிலுள்ளவர்களுக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படவில்லை எனவும் மண்சரிவு காரணமாக வத்தகேம பகுதியிலிருந்து கபரகலை பெத்தேகம, கோமரை, பம்பரல்லை பகுதிகளுக்கான போக்குவரத்து பல மணிநேரம் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

இவ்வீதியில் பல இடங்களில் மண்மேடுகள் சரிந்து வீழ்ந்த வண்ணமுள்ளதால் பொதுமக்கள் மிகவும் அவதானமாக நடந்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# மரம் விழுந்ததில் கடைகள் சேதம்

யது பாஸ்கரன்

கிளிநொச்சி நகரத்தின் பாரிய மரம் ஒன்று பாறி விழுந்ததில் வர்த்தக நிலையம் உட்பட இரண்டு கடைகள் சேதமடைந்துள்ளதுடன், கடையில் உறங்கிக் கொண்டிருந்தவர் காயங்களுக்கு உள்ளாகி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

ஏ-09 வீதியின் புனித திரேசம்மாள் ஆலயத்துக்கு முன்பாக உள்ள வர்த்தக நிலையத்துக்கு அருகில் நின்ற பாரிய வேப்பமரம் ஒன்றே இவ்வாறு திங்கட்கிழமை (20) அதிகாலை அதிகாலை 1 மணி அளவில் பாறி விழுந்துள்ளது.

இதன்போது கடையில் உறங்கிக் கொண்டிருந்தவர் சிறுகாயங்களுக்கு உள்ளாகி தெய்வாதீனமாக உயிர் தப்பியதுடன், கடையின் கூரைகள் சேதமடைந்துள்ளது.



# துரோகிகளை கண்டுபிடித்து வேறுபாடு இன்றி தண்டிக்கவும்

நாட்டின் தேசிய விளையாட்டாக இல்லாவிட்டாலும், கிரிக்கெட் மிகவும் பிரபலமான விளையாட்டு. கிரிக்கெட்டின் உத்வேகத்தால் இந்த நாடு சர்வதேச அரங்கில் பெருமையுடன் நிற்க முடிந்தது. அர்ஜுன ரணதுங்க தலைமையிலான அணி கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை 1996 இல் வென்றபோது, கிரிக்கெட் அலை நாடு முழுவதும் பரவியது.

அந்த கிரிக்கெட் இன்று நம்நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது. உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் சர்வதேச கிரிக்கெட்டில் விளையாட இலங்கைக்கு சர்வதேச கிரிக்கெட் பேரவை தடை விதித்துள்ளது. தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகள் சபையின் பணியைத் தொடருமாறு அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதன் காரணமாகவே சர்வதேச கிரிக்கட் பேரவை இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இலங்கை கிரிக்கெட் நிறுவன அதிகாரிகள் விடுத்த கோரிக்கைக்கு அமைய சர்வதேச கிரிக்கட் பேரவை இந்த தீர்மானத்தை எடுத்ததாக விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார். இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வா மற்றும் அவரது குழுவினர் அவ்வாறான கோரிக்கையை முன்வைக்கவில்லை எனவும் கிரிக்கெட் நிர்வாகத்தின் மீதான அரசியல் அழுத்தத்திற்கு நான் தான் காரணம் எனவும் தெரிவிக்கின்றனர்.

இந்தச் செயலியில் துரோகிகளைக் கண்டுபிடித்து, தராதரமின்றி தண்டிக்க வேண்டும். அனைத்துத் தரப்பினரும் தங்கள் எல்லைக்குள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனைப் பெற்றிருக்க வேண்டும். சந்தியில் ரவுடியாக நடந்து கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. ஆனால் அதுதான் நடந்தது. அதன் விளைவு கிரிக்கெட்டுக்குத் தடை விதிக்கப்பட்டது. ஒட்டுமொத்த நாட்டிற்கும் இழப்பு.

இதனிடையே, விளையாட்டுத்துறை அமைச்சர் கிரிக்கெட் நிர்வாகத்திற்கு இடைக்கால குழுவை நியமித்ததையடுத்து, அதனை எதிர்த்து கிரிக்கெட் நிர்வாகம் நீதிமன்றம் சென்றது. நீதிமன்றத்தின் தீர்ப்பினால் இடைக்கால கிரிக்கெட் குழு நீக்கப்பட்டு கிரிக்கெட் நிறுவனம் முன்னாள் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் போதுதான் சர்வதேச கிரிக்கெட் பேரவை இலங்கையில் கிரிக்கெட்டை தடை செய்தது.

சில காலமாக நடந்து வரும் கிரிக்கெட் தகராறு, எங்கள் அணியின் மோசமான ஆட்டத்திற்கு வழிவகுத்தது என்பதும் உண்மை. தவறு செய்தால், தவறு செய்தவர்கள் மீது நீதிமன்றம் செல்வதற்கு எந்தத் தடையும் இல்லை. அதற்கான ஏற்பாடுகள் நம் நாட்டில் உள்ளன. வழிதவறிச் சென்றதன் விளைவுதான் நாட்டில் கிரிக்கெட் தடை. இப்போது நாம் செய்ய வேண்டியதெல்லாம், தடையை நீக்குவதற்கு நல்லெண்ணத்துடன் செயல்படுவதுதான்.

ஒருவர் மீது மற்றொருவர் குற்றச்சாட்டுகளை முன்வைத்துக்கொண்டே போனால், அவற்றை விசாரணைக்கு உட்படுத்தி முடிப்பதற்கு நீண்ட காலம் எடுக்கும். ஆகையால், முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை விரைவாக விசாரணைக்கு உட்படுத்தி, குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதே ஏனையோருக்கு ஒரு பாடமாக இருக்கும்.

சர்வதேச கிரிக்கெட் பேரவை இலங்கையில் கிரிக்கெட்டை தடைசெய்தமைக்கு இந்தியாவைச் சேர்ந்த ஒருவரே பிரதானமாக இருந்தார் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கு வழிசமைத்தவர்களையும் இனங்கண்டு அவர்களுக்கும் ஒரு பாடமாக இருக்கும் வகையில் தண்டனையை வழங்குவதே சிறந்து என்பதை நினைவூட்டுகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

சில குடும்பங்களின் பெற்றோர்கள் தங்கள் சுமைகளை குறிப்பிட்ட ஒரு மகன் அல்லது மகளிடமே சுமத்தி விடுகின்றனர்.

மற்றப் பிள்ளைகளை எதுவும் கேட்பதும் இல்லை. குடும்பத்தை ஒருவர் மட்டும் தாங்குவதால் அவரது எதிர்கால நலன்களைச் சிந்திக்காத பெற்றோர் பலர் இருக்கின்றார்கள்.

உழைப்பவர்களை இளைக்க விடக்கூடாது. உடலில் வலு இருக்கும் வரை குடும்பத்தைக் கவனிப்பவர்கள், வயது முதிர முதிர இவர்களின் நிலை என்ன?

எல்லோரும் விலகி ஓட தனிமையில் சீவிக்கும் நபர்கள் மிகவும் பரிதாபத்துக்கு உரியவர்கள். இத்தகைய அப்பாவிகளை நீங்கள் கண்டிருப்பீர்கள். பாசத்தைக்காட்டி பிள்ளைகளை ஏமாளியாக்கும் போது, நியாயம் மெளனித்து விடுகின்றது.

பெற்றோர்கள் அன்பை, பாசத்தை ஒரே மாதிரியில் பக்க சார்பின்றி நடத்த வேண்டும். வசதியான பிள்ளைகளை ஒரு விதமாகவும் வசதியற்ற பிள்ளைகளை ஊதாசீனம் செய்வதும் அழகல்ல. சமூகத்தில் எல்லோரும் ஒரே மாதிரியானவர்கள் அல்ல. "நியாயம் அற்று இயங்கலாகாது."

## கடிதங்கள்

### ஆற்றை கடந்தே பிணத்தை கொண்டு செல்லவேண்டும்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட ஒட்டுசுட்டான்-சின்னச்சாளம்பன் கிராமத்தில் மக்கள் உயிரிழந்தவர்களின் சடலங்களை ஆற்றினை கடந்து கொண்டுசெல்லவேண்டிய அபாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும், சின்னச்சாளம் கிராமத்தில் மயானம் இருந்தும் அங்கு உயிரிழந்தவர்களை எரிப்பதற்கான எந்த வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளார்.

கிராம மக்கள் சின்னச்சாளம்பன் இந்து மயானத்திற்குச் செல்லும் ஒரு கிலோமீற்றர் தூரம் கொண்ட வீதியில் சரியான பாலம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் அந்த பாலம் அமைப்பதற்கு அந்த நேரம் ஆட்சியிலிருந்து புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் 5 இலட்சம் ரூபாய் செலவில் நடந்து செல்வதற்கு ஏற்றவகையில் சிறிய பாலத்தினை அமைத்துள்ளார்கள்.

மயானத்திற்குச் செல்லும் வீதியில் ஆறு ஒன்றினை கடக்கவேண்டிய தேவை உள்ளது.

இந்த ஆற்றினை கடப்பதற்கு அமைக்கப்பட்ட பாலத்தினால் இறுதி ஊர்வலம் செல்ல முடியாத நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள மழைவெள்ளத்தினால் ஆற்றினை கடந்து செல்லவேண்டிய அவல நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

– செ.கீதாஞ்சன்



### தீர்க்கப்படாமலேயே

# மறக்கடிக்கப்படும் பிரச்சினைகள்

**மொஹமட் பாதுஷா**

ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் விளையாட்டுச் சுற்றுப் போட்டி ஒன்றில் முழுக் கவனத்தையும் செலுத்திவிட்டு, ஒரு மாதத்தில் எல்லாவற்றையும் மறந்து விட்டு, அடுத்த வேலையைப் பார்க்கப் போய்விடுவது போல, நாட்டில் நடக்கின்ற முக்கிய பிரச்சினைகள், நெருக்கடிகள், குற்றங்கள், விவகாரங்களுக்கு தீர்வு காணப்படாத போதும், நாம் சில நாட்களிலேயே அவற்றை கடந்தும், மறந்தும் போவதற்கு பழக்கப் படுத்தப்பட்டிருக்கின்றோம்.

அரசியல் நிகழ்வுகள், சதித் திட்டங்கள், வன்முறைகள், ஊழல்கள், மக்கள் நலனுக்கு எதிரான ஆளுகை, இனவாத மற்றும் பயங்கரவாத தாக்குதல்கள், கொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள், நிதிமோசடிகள் என நாம் மறந்து கொண்டிருக்கின்ற சம்பவங்களின் வரிசை நீண்டு செல்கின்றது.

ஆக, மக்களின் மறதிதான் இலங்கையை ஆட்சி செய்கின்றவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் குற்றமிழைப்பவர்களுக்கு பக்கபலமாக இருந்து வருகின்றது எனலாம்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார சீரழிவுக்கு ராஜபக்ஷக்களும் உயரதிகாரிகளுமே காரணகர்த்தாக்கள் என்று நீதிமன்றம் அண்மையில் அறிவித்துள்ளது. மக்கள் எப்போதோ சொல்லி விட்டார்கள். அதனாலேயே வீதிக்கு இறங்கிப் போராடினார்கள். அதனை இன்று நீதிமன்றம் சட்டப்படி தீர்ப்பெழுதியுள்ளது. இது மிக முக்கியமான ஒரு விடயமாகும்.

இந்தப் பின்னணியில், ராஜபக்ஷ தரப்பு இதனை மறுத்துள்ளது. மறுபக்கத்தில் 'ராஜபக்ஷக்கள் நாட்டு மக்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும்' என்ற குரல்கள் எழுந்துள்ளன. ஆனால். இதில் இருக்கின்ற விசித்திரமான உண்மை என்னவென்றால், இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் இதனை எல்லோரும் மறந்து விடுவோம் என்பதுதான்.

இவ்வாறு, மக்களின் மறதியைப் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, வெளியில் விசாரணை என்றும் ஆணைக்குழுக்கள் என்றும் ஆட்சி மாற்றம் என்றும் இதோ சட்டம் தன் கடமையைச் செய்கின்றது என்றும் பொய் பிம்பத்தை வெளிக்காட்டியவாறு இழுத்தடிக்கப்பட்ட பிரச்சினைகளின் பட்டியல் நீளமானது.

ஒரு பிரச்சினை வரும்போது அதனைப் பற்றி வாதங்கள் நடத்தி, ஆளுக்காள் குற்றஞ்சாட்டி, பெரிய பட்டிமன்றத்தையே நடத்திவிட்டு, சில நாட்களில் அதனை மக்களும் மறந்து விடுவார்கள், அப்போது வேறு ஒரு பிரச்சினை, பேசுபொருள் கிடைக்கும் அதைப்பற்றி இரண்டு வாரங்கள் பேசுவோம். இதுதான் யதார்த்தமாகும்.

யுத்தம் முடிவுக்கு வந்து விட்டாலும் இனப் பிரச்சினைக்கான மூலகாரணத்திற்கு, இன்னும் தீர்வு காணப்படவில்லை. அப்போது இடம்பெற்ற விதி மீறல்களின் உண்மை கண்டறியப்பட்டு நீதி நிலைநாட்டப்படவில்லை.

யுத்த காலத்தில் பள்ளிவாசல்களில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டமை, கடத்தப்பட்டமை, கப்பம் கோரப்பட்டமைக்கு எந்த நீதியும் நிலைநாட்டப்படவில்லை. கொழும்பிலும் வேறு பல இடங்களிலும் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகள் மீது குற்றச்சாட்டு இருந்தது. பலர் கைது செய்யப்பட்டனர். ஆனால், உயிரிழந்த பொது மக்களுக்கு நீதி கிடைத்ததா என்பது ஆய்வுக்குரியது.

யுத்த காலத்தில் கடத்தப்பட்ட முஸ்லிம்கள், சிங்களவர்கள் என்னவானார்கள்? என்பது சட்ட ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டு நீதி நிலைநாட்டப்படவில்லை. அதனையெல்லாம் ஒருபுறம் வைத்துவிட்டுக் காணாமல்போன தமிழ் மக்கள் பற்றிக் கடந்த பல வருடங்களாகத் தொடராக பேசப்படுகின்றது. ஆனால், அதற்கும் தீர்வு கிடைக்கவில்லை.

இலங்கையில் ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக ஆட்சியாளர்கள் சிலர் ஆயுத அமைப்புக்களிடம் சில கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டதாகக் கதைகள், குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இது அந்தந்தக் காலத்தில் பெரும் பேசுபொருளாக இருந்ததுண்டு. ஆனால், யாரும் தண்டிக்கப்பட்டதில்லை.

2019 ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான நீதி நிலைநாட்டல் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இந்த தாக்குதல் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக சஹ்ரான் கும்பலை வைத்து நடத்தப்பட்டதாக அண்மைக்காலத்தில் பல ஆதாரங்கள் வெளியில் வந்து விட்டன.

இந்த தாக்குதலில் உயிரிழந்தவர்கள் அதிகாரத்திற்காக ஆசைப்பட்டவர்களோ, கடும்போக்காளர்களோ அல்லர். மாறாக இறைவனை வணங்க சென்றிருந்த அப்பாவி பொதுமக்கள், ஹோட்டல்களில் தரித்திருந்த நபர்கள். ஆகவே, இந்த தாக்குதல் இலங்கை அரசியலில் பெரும் பிரளயத்தையும் வாதப் பிரதிவாதங்களையும் ஏற்படுத்தியிருந்தாலும், உண்மைக் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை.

1983 ஜூலைக் கலவரத்தின் பின்னணியும் நோக்கமும் எல்லோருக்கும் தெரியும். ஆயினும், அதற்கான சூத்திரதாரிகள் சரியாகத் தண்டிக்கப்பட்டார்களா என்பது கேள்விக்குரியது. அதேபோல், அளுத்கம, திகண மற்றும் அம்பாறையில் முஸ்லிம்களுக்கு எதிராகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இனக் கலவரங்களுக்குக் காரணமானவர்களும் நீதமாக தண்டிக்கப்படவில்லை.

ஹெல்பிங் அம்பாந்தோட்டை திட்டத்திற்கு முன்பிருந்து மத்திய வங்கி பிணைமுறி மோசடி வரை ஏகப்பட்ட நிதிக் கையாடல்கள், மோசடிகள் இடம்பெற்றிருக்கின்றன. இவ்வாறான ஒவ்வொரு ஊழலும் நாட்டில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தலைப்புச் செய்தியாக இருந்தவையாகும். ஆனால், இவ்விவகாரங்களில் மக்கள் பேய்க்காட்டப்பட்டதைத் தவிர நீதி நிலைநாட்டப்பட்டது எனச் சொல்ல முடியாது. ஆனால், நாடே மறந்து விட்டது.

நாடு பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்தமைக்கு முன்னைய ஆட்சியாளர்களும், அரசியல்வாதிகளும் மட்டுமன்றி தர்மத்தை மீறிச் செயற்பட்ட அதிகாரிகளும் காரணமாவர். ராஜபக்ஷக்கள் மட்டுந்தான் நீதிமன்றால் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆனால், நாட்டை சீரழித்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற 'படம் காட்டப்பட்ட' போதிலும் இதுவரை அது நடக்கவில்லை. இன்னும் சில காலத்தில் மக்களும் இதனை மறந்து போவார்கள்.

முஸ்லிம்களிற்கு இரண்டு இலட்சம் ஹெக்டேயருக்கும் அதிகமான காணிகள் பற்றிய பிரச்சினைகள் உள்ளன. தமிழர்களுக்கும் உள்ளது. ஆனால், இந்தப் பிரச்சினைகளையெல்லாம் ஆழமாக ஆராய்ந்து தீர்த்து வைப்பதற்கும், சர்வதேச சட்ட நியதிகளின் அடிப்படையில் காணிகளை வழங்கவும் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

சிறுபான்மையினங்கள் மீதான இன, மத ஒடுக்குமுறை இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. காணி அபகரிப்புக்களும் திட்டமிட்ட குடியேற்றங்களும் தொடர்கதையே. ஆனால், இதனை வைத்து அரசியல் செய்கின்றார்களே தவிர இன, மத சமத்துவத்திற்கு எதிரானவர்களை தண்டிக்க முடியவில்லை. நாடாளுமன்றத்திலேயே அவ்வாறான சிந்தனை கொண்டவர்கள் அமர்ந்திருக்கின்ற சூழலில் அது முழுமையாக சாத்திமற்றதும் ஆகும்.

நாட்டில் இடம்பெற்ற பல கொலைகள், கடத்தல்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மிகப் பெரும் கொதிநிலையை ஏற்படுத்தியிருந்தன. லசந்த விக்கிரமதுங்க, சிவராம் உள்ளிட்ட ஊடகவியலாளர்களின் கொலை, தமிழ், முஸ்லிம், சிங்கள அரசியல்வாதிகள் மற்றும் முக்கியஸ்தர்களின் கொலை, சிங்கள, தமிழ் புத்திஜீவிகளின் கொலை என எதற்கும் திருப்தியான நீதி கிடைக்கவில்லை.

ரக்பி வீரர் வசீம் தாஜூதீன் தொடக்கம் வர்த்தகர் பிரகாஸ் சாப்டர் போன்ற வர்த்தகர்கள் வரை பலர் மர்மமான முறையில் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் என்பது நாடறிந்த விடயமே. இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றபோது, நீதி நிலைநாட்டப்படும் என்ற தோற்றப்பாடு காட்டப்பட்டாலும், பிறகு அந்த விவகாரம் வேறுபக்கம் திசை திரும்பிவிடுவதை காண்கின்றோம். மக்களும் 'அடுத்த கொலையில்' கவனம் செலுத்தத் தொடங்கி விடுவார்கள்.

இதுதான் இலங்கையின் களநிலை யதார்த்தம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். காலத்தை இழுத்தடித்து, மக்களின் மறதி மீது அரசியல் செய்யும் இந்தப் போக்கை பெருந்தேசிய அரசியலில் மட்டுமன்றி, தமிழ், முஸ்லிம் அரசியலிலும் காணலாம். அரசியல்வாதிகள் மட்டுமன்றி பொறுப்பு வாய்ந்தவர்களும் சாதாரண மக்களும் கூட இதற்கு விதிவிலக்கல்லர்.

நாட்டில் தொடர்ச்சியாகப் பிரச்சினைகள், சர்ச்சை, குழப்பங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அது விடயத்தில் நீதி, தீர்வு வேண்டுமென்ற குரல்கள் எழுகின்றன. பரஸ்பர அறிக்கைகள், கருத்துக்கள் வெளியாகின்றன. மக்களின் கவனம் அதன்பால் திருப்பப்படுகின்றது. மக்களும் அதில் முழுநேரமாகக் கவனம் செலுத்துகின்றனர்.


இதோ நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவிக்கின்றது. விசாரணைக்குழுக்கள், ஆணைக்குழுக்கள், பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்படுகின்றன. அறிக்கைகள் பெறப்படுகின்றன. நாடாளுமன்றம் தொடங்கி சர்வதேச அரங்கு வரை அவ்விவகாரம் விவாதிக்கப்படுகின்றது. ஆனால், பெரும்பாலும் தீர்வு எதுவும் எட்டப்படுவதில்லை

ஒரு சீசனில் ஒரு பிரச்சினை பேசுபொருளாக இருக்கும். இன்னும் சில நாட்களில் இன்னுமொரு பேசுபொருள் கிடைத்துவிடும். மக்கள் மறந்து விடுவார்கள். இதற்காகவே காத்திருந்தவர்களைப் போல அரசியல் தரப்பும் நடந்து கொள்ளும். இந்த இலட்சணத்தில் கிடப்பில் கிடக்கும் பிரச்சினைகள் தீர்க்கப்படப் போவதும் இல்லை. அதற்கு காரணமானவர்கள் திருந்தப் போவதும் இல்லை.

# அறிவாராய்ச்சியியல் [Epistemology]



முகமது நிஜாம் ஆஃப்ரீன்
தத்துவவியல் துறை
பேராதனை பல்கலைக்கழகம்
(நான்காம் வருடம்)
(திங்கள் தொடர்ச்சி...)



இதே நிலையில் உய்த்தறி தம்முடைய முறையாகப் பயன்படுத்தி தமது உள்ளத்தில் இயற்கையாகவே பொதிந்துள்ள கருத்துக்களின் அடிப்படை மூலம் அறிவு எழுவதாகும். அதாவது அனுபவத்திற்கு முதலிலேயே எமது மனம் உடன்பிறந்த அறிவுகளைக் கொண்டிருக்கின்றது. இதில் சொல்லப்படும் அறிவு நிலையானதாகும். இக்கொள்கையின் அடிப்படையில் உறுதியான, நிலையான அறிவு சிந்தனை மூலம் கிடைக்கின்றது. இது புலன்சார்பற்றது. கடவுள், நன்மை, தீமை பற்றிய கருத்துக்கள் உடன் பிறந்த எண்ணங்களாக காணப்படுகின்றது. என்பது அறிவு முதல் வாதிகளின் சிந்தனையாகும். இவற்றில் அறிவு முதல் வாதியான ரேனே டேக்காட்டின் சிந்தனையினை நோக்குகின்ற போது நவீன மெய்யியல் மற்றும் அறிவு முதல் வாதத்தின் தந்தை யாகவும் இவர் காணப்படுகின்றார். இவர் விஞ்ஞான, பௌதிக அதீதம் அகநிலை சார்ந்த உண்மைகளை நிரூபிக்கும் நியம முறைகள் மூலம் நிருபனம் செய்துள்ளார். இவரினால் எழுதப்பட்டுள்ள Meditations on first philosophy of Discursion method என்ற நூலில் அடிப்படையில் காட்டீசியவாத ஐயமுறையினை விளக்கியுள்ளார். டேக்காட்டின் ஐயவாத நிலையானது முறையில் ஐயத்தினை என மையமாகக் கொண்டு பெறப்படும் அறிவே விளக்கும் நிலையில், ஐயத்திற்கு உட்படுத்தக்கூடிய எல்லாவற்றினையும் ஐயத்திற்குட்படுத்தி, ஐயம் ஏற்படாத ஒன்றினை பெறும் அறிவினை நோக்கிச் செல்ல வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். இவ்வாறான ஐயவாதத்தின் முறையியலின் மூலம் எல்லா அறிவுகளையும் ஐயத்திற்கு உட்படுத்துகின்ற போதும் அவை விலக்கப்பட்டு ஐயம் முடியாத அறிவு ஒன்றுக்கு எம்மை இட்டுச் செல்லுகின்ற அறிவுக்கு எம்முடைய உடன்சார் அறிவே காரணமாகும். அதாவது பகுத்தறிவே காரணமாக அமைந்து காணப்படும் இதன் அடிப்படையில் உண்மையான அறிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நிலைப்பாட்டுக்கு வந்தார்.

இவருடைய ஐயுறமுடியாத அறிவினை நிரூபிக்கின்ற வாதமானது மிகவும் பிரபல்யமானதாகக் காணப்பட்டது. அதாவது I think therefore I am அதாவது நான் சிந்திக்கின்றேன் ஆகவே நான் உள்ளேன். எனக் கூறுகின்ற வாதமானது தன்னுடைய இருப்பினை நிறுவுவதற்கு தன்னுடைய அறிவினையும் அதாவது பகுத்தறிவு நிலையினையும், அகவுணரவு சார் அறிவினையும் பயன்படுத்தி உள்ளமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். டேக்காட்டின் இவ்வாதக் கருத்தானது இருமைவாதத்தினை எடுத்து நோக்குகின்ற தன்மையினையும் அதாவது முன்னது ஏதுவான டேக்காட்டின் உளம் உடல் பற்றிய வேறுபாட்டுத் தன்மைக்கும் இவ்வாதம் அடிப்படையாகக் காணப்படுகின்றது. உடல் என்பதும் சடம் எனவும் சடமல்லாத ஓர் வஸ்துவாகவே எடுத்து விளக்கினார். இதன் அடிப்படையில் சடத்தினை நிருபணம் செய்வதற்கும் தன்னுடைய இருப்பாகிய உள்ளத்தினை அல்லது அகம் சார் எண்ணத்தினை எடுத்து விளக்குவதற்கும் இவ் வாதத்தின் பயன்படுத்தி உள்ளமையும் உடல் என்பது ஒரு சிக்கல் தன்மை கொண்ட ஓர் பொறிமுறை எனவும் இதன் தொழிற்பாடுகள் ஒலி, ஒளி போன்ற தூண்டல்களுக்கு உட்படுத்தக் கூடியதெனவும் எடுத்துக் காட்டும் தன்மையில் உளமானது செயற்பாட்டுக்குக் காரணமாக உள்ளது என விளக்குகின்றார். அதே வேளையில் உடலையும் உள்ளத்தையும் வேறுபடுத்திக் காட்டும் நிலையும் உடன் பிறந்த எண்ணங்கள் மூலம் சாத்தியம் எனவும் கூறுகிறார். மனிதன் பிறக்கின்ற தன்மையில் உடலுறை எண்ணங்கள் காணப்படுகின்றன. இத்தன்மையில் மனிதன் தன்னுடைய அறிவினை மேலும் வளர்த்துக் கொள்கிறான். எவ்வகை அறிவைப் பெறுவதற்கும் காரணமாகப் பகுத்தறிவு என்பது முக்கியமானதாகும் எனக் குறிப்பிடுகிறார். இதனால் இவருடைய வாதமானது 17ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் ஓர் திருப்பு முனை கொண்ட அறிவாராட்ச்சின் தன்மையில் ஓர் தாக்கத்தினை ஏற்படுத்தியது எனலாம். டேக்காட்டினைத் தொடர்ந்து ஸ்பினோசா அறிவு முதல் வாதத்தின் பெரும் பங்காளியாக விளங்கினார். அறிவியல் எனப்படும் எதிகா என்ற நூல் அவரது சிந்தனையினை முழுமையாகப் பிரதிபலித்துக் காட்டுகின்றது. மனித அறிவில் இருவகையான கருத்துக்களுள்ளன.

முதல் வகையானவை புலன் உணர்ச்சிகளை மையமாகக் கொண்டவை. இரண்டாவது தன்மையில் ஒரு புறம் உலகு மறுபுறம் புலன்களும் என இரட்டைத் தொடக்கத்தினைக் கொண்டவை. இவை இரண்டினாலும் கிடைக்கும் புலனறிவுக் கருத்துக்கள் ஒழுங்கற்ற அனுபவங்கள் என ஸ்பினேசா கூறுகின்றார் புலனறிவுக் கருத்துக்களில் தெளிவு இருக்காது. அதேவேளை, நிலைத்த பண்பும் இருக்காது. மேலும் குழம்பியிருக்கும் புலனறிவுத் கருத்துக்களில் தெளிவினை ஏற்படுத்த நம்பிக்கைகள் உதவுகின்றன என குறிப்பிடுகின்றார்.


மேலும், மனித அறிவு தர்க்க ரீதியானது என்றும் சிந்தனை ரீதியானது என்றும் குறிப்பிட்டால் அறிவு எவ்வகையிலும் உணர்ச்சி வசப்பட்டதல்ல. தனிமனித தாக்கங்கள் அதிலிருப்பதில்லை. அதாவது தற்சார்வு நிவை இருப்பதில்லை கருத்துக்கள் சர்வாம்சப் பண்பு கொண்டவை. தர்க்க ரீதியாக பரஸ்பரத் தொடர்பு கொண்டவை.ஒன்றிணைந்த அமைப்பாக தம்மை உருவாக்கிக் கொண்டவை. இவையே அறிவு மற்றும் உண்மையின் அளவுகோல்கள் என ஸ்பினேசாவால் கொள்ளப்படுகின்றன. ஸ்பினேசாவால் கூறப்படும் உள்ளுணர்வு புது வடிவம் பெறுகிறது. இவ்வகையான அறிவு சுய இருப்புக் கொண்டவை. உலகின் சாரம் பற்றியவை உள்ளுணர்வின் மூலம் நிறையக் கருத்துக்கள் கிடைக்கின்றன. மனிதன் உலகின் சர்வாம்ச முழுமையினை உணர்கின்றான். சகலதும் சகலவற்றுடனும் உறவு கொண்டலை.தன்னந்தனியானது எதுவும் இல்லை எனவும் உணர்கிறான். புலனறிவு மூலம் இவ்வாறான உண்மையினை பெறமுடியாது இதன் அடிப்படையில் அறிவும் உலகின் இருப்பும் ஒருநிலையில் சமப்படுத்தப்படுகின்றன. (உலகு அறிவு மயமானது என்றும் அறிவு உலக ஒழுங்கு போன்றது என்றும் கூறும் போது அவை ஒன்றையொன்று நெருங்கி வருகின்றன என்பதனை ஸ்பினேச முக்கியப்படுத்துகின்றார்.

ஸ்பினேசாவுக்கு பின்வந்த அறிவுமுதல் வாதியான லைப்பினிஸ்ட் உண்மையான அறிவு தன்னிலிருந்தே எழுவதாகும் என்கின்றார். நமது அறிவு மனதில் ஒடுங்கி புத்தியில் உள்ளது. அனுபவம் அறிவை உருவாக்கவில்லை. அறிவே அனுபவத்தால் வெளியாக்கப்படுகின்றது, தெளிவுபடுத்துகின்றது. புலன்களால் கிடைக்கப்பெறுகின்ற அறிவு என்பதனை ஏற்றுக் கொள்ளாது. உடன்பிறந்த எண்ணங்கள் உள்ளத்தில் ஒடுங்கி நிற்கின்றன என்றும் அனுபவத்தினாலேயே தெளிவடைவதுடன், வெளிப்படையாகவும் பெறுகின்றன என்று உணர்த்தினார். இதன் தன்மையில் உடன் பிறந்த எண்ணங்கள் உண்டு என்றும் உண்மையான அறிவு உள்ளத்தில் இருந்தே எழுகின்றது. அத்தகைய அறிவு புறத்திலிருந்து எழுகின்றன என்பது கட்டுக்கதையே எனக் குறிப்பிடுகின்றார். இவர்கள் அறிவு முதல் வாதிகளாகக் காணப்பட்டாலும் அனுபவ முதல் வாதத்தினையும் இணைக்கும் நோக்கில் செயற்படுகின்றனர். முதல் வாதியான ஜோன் லொக்கின் சிந்தனைகள் எப்போதும் அனுபவம் சார் முறையின் அனுபவ மூலமே அறிவினைப் பெறுகின்றோம் என்றும் பிரித்தானியாவில் அனுபவம் சார் அறிவே முதன்மையானது எனக் கூறிச் செல்லும் லொக் எல்லா அறிவும் சில அளவையியல் கணிதவியல் விதிகளைத் தவிர அனுபவத்தினையே எமக்குக் கிடைக்கின்றது எனக்கூறுகின்றார். அறிவாராட்சியின் வரலாற்றில் இது ஓர் புரட்சியாகவே கருதப்படுகின்றது. இவரினால் எழுதப்பட்டுள்ள "மனித நிலையில் புரியும் ஆற்றல்" என்ற நூலை எழுதிப் புற உலகு பற்றிய அறிவினை அனுபவத் தன்மையிலிருந்தே தொடங்குகின்றார். புலன்கள் மூலமாகவே அமைத்துக் கொள்கின்றோம். அதுமட்டுமல்ல, பௌதிக அதிதம், கடவுள் பற்றிய அறிவையும் புலன் உணர்ச்சி மூலமே அறிந்து கொள்கின்றோம். இதன் அடிப்படையில் உடன்பிறந்த எண்ணங்கள் என எதுவும் இல்லை என்ற டேக்காட்டின் சிந்தனைகளை மறுக்கின்றார். முதன்முதலாக அனுபவம் சார் அறிவை ஏற்புடைய அறிவாக ஏற்றுக்கொள்ளும் போக்கு பிரித்தானிய அனுபவ முதல்வாதத்தின் தந்தையாக கருதப்படும் லொக்குடன் ஆரம்பமாகின்றது. லொக் எல்லா அறிவும் சில அளவையியல், கணிதவியல் விதிகளைத் தவிர அனுபவத்தினாலேயே எமக்கு கிடைக்கின்றது எனக் கூறினார்.

அறிவாராய்ச்சியியல் வரலாற்றில் இது ஒரு புரட்சியாகவே கருதப்படுகின்றது. லொக் தம்முடைய காலத்தில் அறிவினைப்பற்றிய சிக்கல் தன்மையை ஆராயத் தொடங்கியதன் விளைவாக மனித நிலையில் புரியும் ஆற்றல் (An essay concerning human understanding – 1690) என்ற நூலை எழுதினார். இந்நூலில் எண்ணங்களின் தோற்றத்தினை அறிதலின் பொருட்டும், உறுதியான அறிவு யாது என்றும் அறிவின் பரப்பு யாது? எத்தகையது? என்றும் இதற்குரிய ஆதாரங்கள் யாவை எனவும் மெய்யியலின் மனித அறிவாற்றலின் எல்லைகளை வரையறை செய்யும் வகையில் அறிவாற்றலுக்கு விளங்குவனவற்றை நீக்கி விட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். டேக்கார்ட் போன்ற அப்பால் அறிவு முதல் வாதிகளின் கோட்பாடுகளை எதிர்த்து, குறிப்பாக அவர்களின் உடன்பிறந்த எண்ணங்களை விமர்சிப்பதாக அவரின் கருத்து அமைகின்றது.

புற உலகு பற்றிய சடப்பொருள்வாத அனுபவக் கொள்கையை முன்வைத்தார். புற உலகு பற்றிய அறிவு அனுபவத்திலிருந்தே தொடங்குகின்றன என்று அதனது இருப்பினை ஏற்றுக் கொண்டதுடன், அதிலிருந்து புலன்கள் மூலமாக அவை பற்றிய அறிவினை அமைத்துக் கொள்ளலாம் என்றார். எண்ணங்கள், அறிவினது எல்லைத் தன்மை, கடவுள் இருப்பு, பௌதீகவதிதம் ஆகியவற்றினது கருத்துக்களையும், அவையிட்ட அறிவுகளையும் எமது புலனுணர்ச்சி மூலமே பெறலாம் என்றார். அறிவு எவ்வாறு முடிவுகளை அடைகின்றது என்ற முறையை ஏற்கும் முன்னர் அறிவைப் பற்றியும் உண்ணங்களைப் பற்றியும் ஆராய விரும்பினார். முன் எண்ணமாக எதனையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அனுபவத்தால் உண்மையென ஆராய்ந்து மெய்ப்பிக்கப்படாத எதனையும் உண்மையென ஏற்க மறுத்தார்.

(நாளை தொடரும்...)



# இது என் வழி...



கமல்ஹாசனின் மூத்த மகள் சுருதிஹாசன். நடிகை, பாடகி, இசையமைப்பாளர் என பன்முக திறமை கொண்டவர். 'ஏழாம் அறிவு' என்ற தமிழ் படத்தின் மூலம் சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமாகி தமிழ், தெலுங்கு, இந்தி மொழி படங்களில் நடித்து வருகிறார். சூர்யா, தனுஷ் உட்பட முன்னணி நடிகர்களுடன் நடித்துள்ளார். சினிமாவில் பல்வேறு விருதுகளை பெற்றுள்ள சுருதிஹாசன் சமூக வலைத்தளங்களில் கருத்துக்கள் பதிவிடுவதில் ஆர்வம் கொண்டவர். மேலும், சினிமா மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்பதை புகைப்படங்களாகவும், வீடியோக்களாகவும் பகிர்ந்து கருத்துக்களை பதிவிடுவார்.

அதன்படி, அண்மையில் தீபாவளி பண்டிகையை நண்பருடன் சேர்ந்து கொண்டாடி அந்த புகைப்படங்களையும் வெளியிட்டு அனைவருக்கும் வாழ்த்து கூறியுள்ளார்.

இந்நிலையில், தற்போது அவரது பெயரை உடலில் வரைந்துள்ள டாட்டூ தெரியும்படி அவர் புகைப்படம் வெளியிட்டு கருத்துக்கள் பதிவிட்டுள்ளார்.

அதில், "இந்த நேரத்தில் நான் எல்லாவற்றையும் மறந்து வெளியே வர விரும்புகிறேன். இந்த முறை நான் எழுந்து நின்று கத்துகிறேன். நான் என் வழியில் செய்வேன், இது என் வழி அல்லது நெடுஞ்சாலை" என்று பதிவிட்டுள்ளார்.



# மன்சூர் அலிகான் மன்னிப்பு கேட்க வேண்டும்

த்ரிஷா குறித்து மன்சூர் அலிகான் பேசியதற்கு கண்டனம் தெரிவித்த நடிகர் சங்கம், ஊடகங்கள் முன்பு அவர் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

இது குறித்து தென்னிந்திய நடிகர் சங்கம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், மூத்த நடிகர் மன்சூர் அலிகான் நடிகைகள் பற்றி ஒரு பேட்டியில் பேசிய வீடியோவை கண்டு அதிர்ச்சி அடைந்தோம்.

சக நடிகர்களைப் பற்றி நகைச்சுவை என்ற பெயரில் தரக்குறைவாக பேசிய மன்சூர் அலிகானை தென்னிந்திய நடிகர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

ஒரு நடிகராக, இயக்குநராக, தயாரிப்பாளராக பொறுப்புணர்ந்து பேச அவர் கற்றுக்கொள்ள வேண்டும். மக்களால் கவனிக்கப்படும் பிரபலங்களாக இருக்கும் போது, தான் உதிர்க்கும் கருத்துகளும், வார்த்தைகளும் கண்ணியமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படை உணர்வின்றி அவர் பேசியது மிகவும் தவறாகும். எந்த ஊடகம் முன்பு அவர் பேசினாரோ, அதே ஊடகம் முன்பு உண்மை மனதுடன் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டுகிறோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அட்லியின் மெகா திட்டம்

இயக்குநர் அட்லி ஒரே நேரத்தில் நான்கு திரைப்படங்களை தயாரிக்க திட்டமிட்டுள்ளதாக அண்மையில் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இயக்குநர் அட்லி இயக்கத்தில் ஷாருக்கான் நடிப்பில் உருவான 'ஜவான்' திரைப்படம் கடந்த சில மாதங்களுக்கு முன் வெளியாகி மிகப்பெரிய வெற்றி பெற்றது.

இந்த நிலையில் அடுத்ததாக இயக்குநர் அட்லி, விஜய் மற்றும் ஷாருக்கான் இணைந்து நடிக்கும் படத்தை இயக்க திட்டமிட்டு இருப்பதாக கூறினார். மேலும் ரஜினிக்கும் ஒரு திரைக்கதை வைத்திருப்பதாகவும் அது பாட்ஷாவை விட அசத்தலாக இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

# ராம் சரண் ஜோடியாக சாய் பல்லவி

தெலுங்கு முன்னணி நடிகர்களுள் ஒருவரான ராம்சரண், ஷங்கரின் 'கேம் சேஞ்சர்' என்றத் திரைப்படத்தில் தற்போது நடித்து வருகிறார். பான் இந்தியா முறையில் இந்தப் படம் உருவாகிறது.



இதையடுத்து அவர் நடிக்கும் படத்தை 'உப்பெனா' படத்தை இயக்கிய புச்சிபாபு சனா இயக்குகிறார். இதில் கதாநாயகியாக சாய் பல்லவி நடிக்க இருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

முக்கிய கேரக்டரில் விஜய் சேதுபதி நடிக்க இருப்பதாக ஏற்கெனவே செய்திகள் வெளியான நிலையில், ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.

கிராமத்துப் பின்னணியில் உருவாகும் இந்தப் படம் பற்றிய அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.



# த்ரிஷா குறித்து சர்ச்சை பேச்சு

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவான லியோ திரைப்படத்தில் நடித்திருந்த மன்சூர் அலிகான் அளித்த பேட்டியில், நடிகை த்ரிஷா குறித்து ஆபாசமாக பேசியுள்ளார்.

மன்சூர் அலிகானின் சர்ச்சை பேச்சின் வீடியோ இணையத்தில் வைரலானதை அடுத்து, இந்த பேச்சுக்கு த்ரிஷா கடும் கண்டனத்தை பதிவு செய்தார்.

தொடர்ந்து, மன்சூர் அலிகானின் இந்த சர்ச்சை பேச்சுக்கு இயக்குநர் லோகேஷ் கனகராஜ், இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ், நடிகர் சாந்தனு, பாடகி சின்மயி, நடிகை மாளவிகா மோகனன் உள்ளிட்டோரும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில், இதற்கு பதிலளிக்கும் விதமாக மன்சூர் அலிகான் தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவில், த்ரிஷாவை தான் தப்பா பேசியதாக, தனது படம் வெளியாகும் நேரத்தில், பிரபல கட்சி சார்பா தேர்தலில் போட்டியிடவுள்ள நேரத்தில் வீடியோவை திரித்து வெளியிட்டுள்ளதாக கூறியுள்ளார்.

உண்மையில அந்த பொண்ணை உயர்வாத்தான் சொல்லிருப்பேன். அத கட் பண்ணி போட்டு, கலகம் பண்ண நெனச்சா நான் என்ன இந்த சலசலப்புகளுக்கு என்ன அஞ்சரவனா. 360 படங்கள்ல நடிச்சிட்டேன். நான் எப்பவும் சக நடிகைகளுக்கு ரொம்ப மரியாத குடுக்கறவன் எல்லாருக்கும்" என் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னோக்கி செல்லல்:

# குற்றமற்றதாக்குவதற்கான தருணம் இது


மதுரி தமிழ்மாறன்
தேசிய சட்ட ஆலோசகர்–
இலங்கை, சர்வதேச சட்டவல்லுனர்
ஆணைக்குழு



சமீபத்தில், மொரீஷியஸ் உயர் நீதிமன்றமானது, ஒப்புதலுடன் கூடிய ஒரே பாலினர், பாலியல் உறவில் ஈடுபடுவதைக் குற்றமாக்கும் 185 ஆண்டுகள் பழைமையான சட்டத்தினை அரசியலமைப்புக்கு முரணான ஒன்று என தீர்ப்பளித்தது. இந்த சமீபத்திய தீர்ப்பினூடாக, கடந்த சில ஆண்டுகளில், குறிப்பிட்ட சட்டத்தை ஏற்றுக்கொள்வதன் மூலமாகவோ அல்லது நீதித்துறை தீர்மானங்களின் விளைவாகவோ, ஒப்புதலுடன் கூடிய ஒரே பாலின பாலியல் உறவுகளைக் குற்றமற்றதாக மாற்றிய அரசுகளின் வரிசையில் மொரிஷியஸ் நாடும் இணைந்துள்ளது. இந்த உலகளாவிய மாற்ற அலையில் எதிர்வரும் மாதங்களில் இலங்கையும் இணையும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்படுவது மட்டுமன்றி திடமான நம்பிக்கையும் உள்ளது.

இலங்கை (சிலோன்) பிரித்தானியக் காலனித்துவ நாடாக இருந்தபோது, 1833இல் பிரித்தானியர்கள் தண்டனைச் சட்டக்கோவையை அறிமுகப்படுத்தினர். இலங்கையின் இந்த தண்டனைச் சட்டக்கோவையானது, 1860இல் இந்தியத் தண்டனைச் சட்டக்கோவையினை முன்மாதிரியாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் ஆகிய மூன்று காலனித்துவ சக்திகள் இலங்கையை ஆட்சி செய்தநிலையில், இலங்கை தண்டனைச் சட்டக்கோவையில் "இயற்கையின் நியதிக்கு முரணான குற்றங்கள்", அதாவது, "இயற்கையின் நியதிக்கு முரணான புணர்வு" (பிரிவு 365) மற்றும் "ஆட்களுக்கிடையேயான மிக்க இழிச்செயல்" (பிரிவு 365A) போன்ற குற்றவியல் பிரிவுகளை அறிமுகப்படுத்தி ஒரே பாலினருக்கிடையிலான ஒப்புதலுடன்கூடிய பாலியல் நடத்தையை குற்றமாக்கியவர்கள் ஆங்கிலேயர்களேயாவர்.

பிரித்தானியர்களிடமிருந்து இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரத்தினை பெற்றுக்கொண்டது. ஆனால், குறித்த தண்டனைச் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு 140 வருடங்களாகியும், ஒரு சில திருத்தங்களுடன் தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளன. இச்சட்டங்கள் அரிதாகவே நடைமுறைப்படுத்தப்பட்டாலும், அரச மற்றும் அரச சார்பற்றவர்களால் தன்பாலீர்ப்புள்ள பெண்கள், தன்பாலீர்ப்புள்ள ஆண்கள், இருபாலீர்ப்புள்ளோர், திருநர் (LGBT) மற்றும் இருமைக்குள் அடங்காதோர் போன்றோரை துன்புறுத்தல், அச்சுறுத்தல் மற்றும் வழக்கு தொடர்வு ஆகியவற்றிற்கு இலக்காக்க கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றன. இரு நபர்களுக்கிடையே ஒப்புதலுடன் கூடிய ஒரே பால் பாலியல் நடத்தையைக் குற்றப்படுத்துவதானது, உண்மையான அல்லது உணரப்பட்ட பாலீர்ப்பிற்கு எதிராக அறியாமை, பாரபட்சம் மற்றும் வெறுப்பு ஆகியவற்றால் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ உந்தப்பட்டு பாகுபாடு, வன்முறை மற்றும் சமூக களங்கத்தை நிலைநிறுத்துவதற்கு மாத்திரமே வித்திடுகிறது.

இலங்கையில், LGBT மற்றும் இருமைக்குள் அடங்காத நபர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் பல்வேறு சிவில் சமூக அமைப்புகளாலும் பல ஆண்டுகளாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஒருமித்த பாலினருக்கிடையிலான ஒப்புதலுடன் கூடிய பாலியல் நடத்தையை குற்றமயமாக்குவதானது, அரச மற்றும் தனியார்த்துறை அதிகாரிகளால் மிரட்டி பணம் பறிக்கும் நிகழ்வுகளுக்கு வழிவகுக்கும் காரணியாகவும் அமைந்துள்ளது.

LGBT மற்றும் இருமைக்குள் அடங்காத நபர்கள் போன்றோர் சட்டத்தால் "குற்றவாளிகள்" என முத்திரையிடப்படும்போது, வெளிப்பட்டு விடுவார்கள் என்ற பயம், பாகுபாடு, களங்கம் மற்றும் அவமானம் ஆகியவற்றின் காரணமாக சுகாதார சேவைகளை அணுகுவதற்கான வாய்ப்புகள் குறைவடைகின்றது. எடுத்துக்காட்டாக, சிறந்த பாலியல் நடத்தை மற்றும் எச்ஐவி/எய்ட்ஸ் தடுப்பு மற்றும் பாதுகாப்பு பற்றிய முக்கிய செய்திகளைப் பற்றி அறிந்து கொள்வதில் அவர்களுக்கு சிரமம் ஏற்படுகிறது.

இலங்கையானது, சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தால் கட்டுப்படுத்தப்படும் அனைத்து முக்கிய சர்வதேச மனித உரிமைகள் சமவாயங்கள் மற்றும் அவற்றின் சில விருப்புரிமை பின்னேடுகளுக்கு ஒரு பங்காளி தரப்பாகும். இவை பாகுபாடின்மை எனும் கொள்கையை வலுப்படுத்துபவை மேலும், சட்டம் மற்றும் நடைமுறையில் அனைவருக்கும் சட்டத்தின் முன் சமத்துவத்திற்கான உரிமை மற்றும் பாகுபாடின்றி சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கிறது. ஒரு தனிநபருக்கு எதிராக அவருடைய "இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது பிற கருத்து, தேசிய அல்லது சமூக பின்னணி, சொத்து, பிறப்பு அல்லது பிற நிலை" போன்ற தடைசெய்யப்பட்ட காரணிகளின் அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது என்ற கடப்பாடு உட்பட, பாகுபாடுகளுக்கு எதிரான தடைக்கு தங்களுடைய உள்நாட்டு சட்டம் இணங்குவதை உறுதி செய்யுமாறு ஐ.நா மனித உரிமைகள் குழு ஒவ்வொரு அரசுகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளது. யங் எதிர். அவுஸ்திரேலியா (2003) என்ற வழக்கில் ICCPR சமவாயத்தின் உறுப்புரை 26இன் கீழ் பாகுபாடு காட்டப்படுவதற்கு எதிரான தடையானது பாலீர்ப்பு அடிப்படையிலான பாகுபாட்டினையும் உள்ளடக்கியதாகும் என்று அதன் குழு தீர்ப்பளித்தது.

2022 இல், இலங்கை அரசு சார்பில் மனித உரிமைகள் குழுவின் முன் உரையாற்றியபோது, இலங்கையின் அரசியலமைப்பின் 12ஆவது உறுப்புரையில் பாலீர்ப்பு அடிப்படையிலான பாகுபாடின்மையும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் கூறியது. குறித்த அந்த அறிக்கையானது, ஒரே பால் பாலியல் நடத்தையை தடைசெய்யும் இலங்கையின் குற்றவியல் சட்டங்கள் மற்றும் பல ஆண்டுகளாக LGBT மற்றும் இருமைக்குள் அடங்காத நபர்களுக்கு எதிராக ஆவணப்படுத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் போன்றவற்றோடு ஒப்பிடுகையில் முரண்பாட்டினை கொண்டிருக்கிறது. மனித உரிமை குழு, ஏப்ரல் 2023இல் வெளியிடப்பட்ட அதன் இறுதி அவதானிப்புகளில், "தன்பாலீர்ப்புள்ள பெண்கள், தன்பாலீர்ப்புள்ள ஆண்கள், இருபாலீர்ப்புள்ளோர் மற்றும் திருநர்கள் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 365, 365A மற்றும் 399 ஆகியவற்றின் கீழ் குற்றமயமாக்கலைத் தொடர்ந்து எதிர்கொண்டு வருகின்றனர் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு மற்றும் வீட்டுவசதி ஆகியவற்றை அணுகுவது உள்ளிட்ட பல்வேறு பாகுபாடுகளை தினசரி அடிப்படையில் எதிர்கொள்கின்றனர்" மற்றும் "அவர்கள் தன்னிச்சையான கைது மற்றும் தடுப்புக்காவல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களாகவும் மற்றும் ஒரே பால் பாலியல் நடத்தைக்கான ஆதாரங்களை சேகரிக்கும் முயற்சியில் கட்டாய குதவழி பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுகிறார்கள்" என்று தனது கவலையை வெளிப்படுத்தியிருந்தது. மேற்கூறிய சட்டத்தின் பிரிவுகளை இரத்து செய்யவும், LGBT நபர்களை எந்தவிதமான பாகுபாடுகளிலிருந்தும் பாதுகாக்கவும், பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் அவர்களுக்கு எதிரான சமூகத்தின் எதிர்மறையான பழைய சிந்தனைகள் மற்றும் பாரபட்சங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு குறித்த குழு அரசாங்கத்தை கேட்டுக்கொண்டது.

மேலும், 2023இல், மனித உரிமைகள் பேரவையில், இலங்கை அதன் அனைத்துலக காலமுறை மீளாய்வின்போது (UPR), பாலீர்ப்பு அடிப்படையிலான பாகுபாடின்மை அடிப்படையில் பல குற்றவியல் வழக்குகள் மறுபரிசீலனை செய்யப்பட்டதாக குறிப்பிட்டது. உலகளாவிய காலமுறை மீளாய்வு பணிக்குழு, ஒரே பால் பாலியல் நடத்தையை குற்றமற்றதாக்குவதற்கு தனது பரிந்துரைகளையும் வழங்கியது. துரதிர்ஷ்டவசமாக, அத்தகைய பரிந்துரைகளை இலங்கை வெளிப்படையாக ஏற்கவில்லை என்பதோடு, மாறாக அவற்றைக் கவனத்தில் மட்டும் எடுத்துக் கொண்டது. UPR இன் குறித்த பரிந்துரைகள், 2022இல், தண்டனைச் சட்டகோவையின் 365A பிரிவின் கீழ் பெண்களுக்கிடையேயான ஒருமித்த ஒரே பால் பாலியல் நடத்தையை குற்றமாக்குவது அவர்களின் பாகுபாடு இல்லாத உரிமையை மீறுவதாகும் என்றும் எனவே பெண்களுக்கிடையில் ஒருமித்த ஒரே பால் பாலியல் நடத்தையை இலங்கை குற்றமற்றதாக்க வேண்டும் என்றும் பெண்களுக்கு எதிரான சகலவிதமான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான ஐ.நா குழுவின் (CEDAW) பரிந்துரையை எதிரொலிக்கின்றன. எனவே இதிலிருந்து, ஒருமித்த ஒரே பால் உறவுகளை தொடர்ந்து குற்றமாக்குவது இலங்கையை அதன் சர்வதேச மனித உரிமைகள் சட்டக் கடமைகளுடன் முரண்படச் செய்வது மட்டுமன்றி உலக அரங்கில் அதன் நம்பகத்தன்மையை சிதைக்கிறது என்பது தெளிவாகிறது.

2023 மே மாதம், பாலீர்ப்பினை தண்டனைக்குரிய குற்றமாக மாற்றும் சட்டங்களை இரத்து செய்யும் நோக்கத்தில் முன்வைக்கப்பட்ட 2023ஆம் ஆண்டின் தண்டனைச் சட்டக்கோவை திருத்தச்சட்டத்தின் அரசியலமைப்புவியல் தொடர்பாக இலங்கை உயர் நீதிமன்றம் தன் சிறப்பு தீர்மானத்தினை வெளியிட்டது. இதில் முதன்முறையாக நாட்டின் உயர் நீதிமன்றமானது, தன்பாலீர்ப்பு உறவுகளை குற்றமாக்குவதென்பது சமத்துவம், பாகுபாடின்மை, கண்ணியம் மற்றும் அந்தரங்கத்துக்கான உரிமை போன்றவற்றிற்கான உரிமைகளை அவமதிப்பதாகும் என்று அங்கீகரித்திருப்பதானது இந்த தீர்மானத்தை தொடர LGBT நபர்களுடன் பணிபுரிந்த அத்துணை மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கும் ஒரு முக்கியமான தருணமாகும். உயர் நீதிமன்றத்தின் குறித்த தீர்மானமானது, தன்பாலீர்ப்பு உறவுகளை சமூகத்திற்கு அச்சுறுத்தலாக சித்தரிக்கும் ஆதாரமற்ற சொல்லாட்சிகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்துள்ளது. இந்த திருத்தச்சட்டம் அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டது என்ற உயர் நீதிமன்றத்தின் உறுதிப்பாட்டின் பலத்தில், தண்டனைச் சட்டக்கோவையின் திருத்தச்சட்டம் தற்போது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு சட்டமாக மாறுவதற்கு எளிய பெரும்பான்மை மட்டுமே தேவைப்படுகிறது.

பாராளுமன்றத்தில் எதிர்வரும் மாதங்களில் இந்த திருத்தச்சட்டம் மீதான வாக்கெடுப்பு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் தொலவத்தவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் சட்டமூலமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. குறித்த சட்டமூலத்தின் கீழ், 1883ஆம் ஆண்டின் இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் 365வது பிரிவு நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக "விலங்குகளை புணர்தல்" மாத்திரமே ஒரு "இயற்கைக்கு மாறான குற்றம்" என்று குறிப்பிடப்படும், அதே சமயம் பிரிவு 365A முழுமையாக நீக்கப்படும்.

உலகெங்கிலுமுள்ள அரசுகள், ஒப்புதலுடன்கூடிய ஒரே பால் உறவுகளை களங்கப்படுத்தும் மற்றும் குற்றமாக கருதும் காலாவதியான சட்டங்களை மறுபரிசீலனை செய்வதையும் திருத்தங்களை மேற்கொள்வதையும் காண்பது பெருமகிழ்ச்சி அளிக்கிறது. இலங்கையும் இதைப் பின்பற்றத் தயங்காது, இறுதியாக மிகவும் நியாயமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தினை நோக்கிய நீண்ட முன்னேற்ற அடியினை எடுத்து வைக்க வேண்டும்.

ஒப்புதலுடன்கூடிய ஒரே பால் பாலியல் நடத்தையை குற்றமற்றதாக்குவது, தனிமனிதர்கள் தங்கள் இணையர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் அவர்களின் வாழ்க்கையை நம்பகத்தன்மையுடன் வாழ்வதற்குமான சுயாட்சியை இலங்கை அங்கீகரித்து மதிக்கிறது என்ற சக்திவாய்ந்த செய்தியை உலகிற்கு சென்றடைய வைக்கும். அந்தத் திசையில் முதல் அடியினை உயர் நீதிமன்றம் எடுத்து வைத்துள்ளது, எனவே, இந்த திருத்தச்சட்டம் நிறைவேற்றப்படுவதை இலங்கை பாராளுமன்றம் உறுதி செய்ய வேண்டிய தருணம் இது.

உத்தர பிரதேசம்

## 'ஹலால்' தடை

முஸ்லிம் மார்க்க சட்ட விதிகளின்படி, 'ஹலால்' என்றால் அனுமதிக்கப்பட்டவை என்றும் 'ஹராம்' என்றால் தடை செய்யப்பட்டவை என்றும் பொருள். இந்தியாவில் 'ஹலால்' தரச்சான்று சட்டப்பூர்வமாக நடைமுறையில் இல்லை.

எனினும், சில தனியார் நிறுவனங்கள் உணவு, மருந்து, அழகு சாதன பொருட்களுக்கு 'ஹலால்' தரச் சான்றுகளை அளித்து வருகின்றன.

இதுதொடர்பாக உத்தர பிரதேச தலைநகர் லக்னோவை சேர்ந்த சைலேந்திர குமார் சர்மா என்பவர் உள்ளூர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

அதில், "ஹலால் இண்டியா பிரைவேட் லிமிடெட் - சென்னை, ஜமாத் உலமா ஹிண்ட் அறக்கட்டளை - புதுடெல்லி, ஹலால் கவுன்சில் ஆப் இண்டியா- மும்பை, ஜமாத் உலமா - மும்பை ஆகிய அமைப்புகள் பல்வேறு பொருட்களுக்கு சட்டவிரோதமாக 'ஹலால்' தரச்சான்றுகளை அளித்துவருகின்றன. இதற்கு தடை விதிக்க வேண்டும்" என்று கோரினார்.

இதுதொடர்பாக லக்னோ பொலிஸார் வழக்கு பதிவு செய்னர். இதைத் தொடர்ந்து உத்தர பிரதேச அரசு, சனிக்கிழமை (18) பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது,

உத்தர பிரதேசத்தில் 'ஹலால்' தரச் சான்று பெற்ற பொருட்களின் விற்பனைக்கு தடை விதிக்கப்படுகிறது. இந்த தடை உடனடியாக அமலுக்கு வருகிறது. தடையை மீறுவோர் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்கள் இந்த தடை வரம்புக்குள் வராது என உத்தரவில் தெரிவிக் கப்பட்டுள்ளது. உத்தர பிரதேச அரசு வட்டாரங்கள் கூறியதாவது:

ஐ.எஸ்.ஐ மற்றும் எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ. தரச்சான்று நடைமுறைகளே சட்டப்பூர்வமானது. 'ஹலால்' தரச் சான்று நடைமுறை சட்டவிரோதமானது. இந்த விவகாரத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்க முதல்வர் யோகி ஆதித்ய நாத் உத்தரவிட்டார். இதன்படி 'ஹலால்' தரச் சான்று நடைமுறைக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. தடையை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் உரிமம் ரத்து செய்யப்படும். சட்டவிதிகளின்படி அதிகபட்சமாக ஆயுள் தண்டனை விதிக்கப்படவும் வாய்ப்பு இருக்கிறது. அதிகபட்சமாக 10 இலட்சம் ரூபா வரை அபராதமும் விதிக்கப்படலாம் என தெரிவித்துள்ளன.



விசாகப்பட்டினம்

## துறைமுகத்தில் தீ; 50 படகுகள் எரிந்தன

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தில் மீனவர்களின் படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்தில் ஞாயிற்றுக்கிழமை (19) ஒரு படகில் இருந்து பரவிய தீ, அடுத்தடுத்து மற்ற படகுகளுக்கு பரவி பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தகவலறிந்து 4-க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்களில் விரைந்து வந்த தீயணைப்பு துறையினர், துறைமுக அதிகாரிகள் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். படகில் வைத்திருந்த எல்பிஜி சிலிண்டர்கள் வெடித்ததால் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பதி

## இந்தியா தோல்வியால் அதிர்ச்சியில் மரணம்




திருப்பதி அருகே துர்க்க சமுத்திரம் பகுதியைச் சேர்ந்தவர் ஜோதி குமார் என்பவர், தன்னுடைய வீட்டில் உலக கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தை ஆர்வத்துடன் தொலைக்காட்சியில் பார்த்து கொண்டிருந்துள்ளார். போட்டியின் போக்கு மாறமாற வேதனையில் காணப்பட்ட ஜோதிகுமாருக்கு, திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், குடும்பத்தினர் உடனடியாக அவரை திருப்பதியில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு ஜோதிகுமாரை பரிசோதித்த மருத்துவர்கள், மாரடைப்பு காரணமாக அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர்.

கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியின் தோல்வியை தாங்கி கொள்ள இயலாமல் இளைஞர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

அமெரிக்கா

## "போர் நிறுத்தமா? கூடவே கூடாது"

இஸ்ரேல்- ஹமாஸ்க்கும் இடையிலான போர் 40 நாட்களை கடந்த நிலையில், இரு தரப்பிலும் பல உயிர்சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில், போரை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யுமாறு இஸ்ரேலுக்கு பல உலக நாடுகளும், ஐ.நா. மற்றும் உலக சுகாதார அமைப்புகளும் கோரிக்கை வைத்து வருகின்றன. ஆனால், இந்த கோரிக்கைகளை இஸ்ரேல் புறக்கணித்து வருகிறது.

இது தொடர்பாக அமெரிக்காவின் பிரபல "தி வொஷிங்டன் போஸ்ட்" பத்திரிகையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கருத்து பதிவிட்டிருக்கிறார்.

அதில் அவர் "போர் நிறுத்தம் வேண்டும் என பலர் கூறி வருகின்றனர். ஹமாஸ் அமைப்பினர் பயங்கரவாத சித்தாந்தத்தை கடைபிடித்து வருவதை நிறுத்தாத வரையில் போர் இடைநிறுத்தம் என்பது அமைதிக்கான வழியாக இருக்காது. ஹமாஸ் அமைப்பினருக்கு ஒவ்வொரு போர் இடைநிறுத்த காலமும் தங்கள் இராணுவ தளவாடங்களையும், பயங்கரவாத திட்டங்களுக்கான ஆயுதங்களையும் சேகரித்து வைத்து கொள்ளும் காலமாக உள்ளது.

தங்கள் அமைப்பின் பயங்கரவாதிகளை பலம் பெற செய்து மீண்டும் அப்பாவிகளை கொல்ல தொடங்குவார்கள். தற்காலிகமாக போரை நிறுத்துவது நமது நோக்கமாக இருக்க கூடாது. நிரந்தரமாக பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வருவதே நோக்கமாக இருக்க வேண்டும்.

இஸ்ரேலும் மனிதாபிமான சட்டங்களை மதித்து, பொதுமக்களின் உயிரிழப்பை குறைத்துக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். தங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலால் மனதில் ஏற்பட்டுள்ள காயத்தையும் பதிலடி கொடுக்க வேண்டிய கோபத்தையும் நிதானமாக வெளிப்படுத்தி தவறுகள் நடக்காமல் இஸ்ரேல் பார்த்து கொள்ள வேண்டும். போர் நிறைவடைந்ததும், பாலஸ்தீனம் இரு நாடுகளாக பிரிக்கப்படுவதுதான் இந்த சிக்கலுக்கு தீர்வு" என தெரிவித்துள்ளார்.



துருக்கி

## கருங்கடலில் சென்ற துருக்கி கப்பல் மாயம்



துருக்கியில் புயலுக்கு மத்தியில் 12 பணியாளர்களுடன் கருங்கடல் கடற்கரையில் சென்றுக் கொண்டிருந்த துருக்கியின் சரக்குக் கப்பல் மாயமாகியுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (19) வீசிய புயலுக்கு மத்தியில் 12 பணியாளர்களுடன் துருக்கிய சரக்குக் கப்பல் ஒன்று நாட்டின் கருங்கடல் கடற்கரையில் காணாமல் போயுள்ளதாகவும், அன்றிலிருந்து அதிகாரிகளால் கப்பலில் இருந்தவர்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும் உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடமேற்கு துருக்கியின் சோங்குல்டாக் மாகாணத்தில் உள்ள எரெக்லியில் உள்ள ஒரு இடைவெளியை நோக்கி கப்பல் நகர்ந்து கொண்டி ருந்ததாக துருக்கிய கொடியிடப் பட்ட காஃப்க மெட்லரின் கப்பலின் கேப்டன் தெரிவித்ததாக மாகாண ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேலும், இப்பகுதியில் மோசமான காலநிலை காரணமாக கப்பலை தேடும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் காலநிலை தெளிவான பிறகு மீட்பு பணி தொடங்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.







# 10 'சம்பவங்கள்'

நடப்பு உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளது அவுஸ்திரேலிய அணி. பலம் வாய்ந்த இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி ஆறாவது முறையாக கோப்பையை கைப்பற்றியுள்ளது ஆஸி. இந்தப் போட்டியின் டாப் 10 தருணங்கள்.

### "மிகவும் மகிழ்ச்சி"

இந்தத் தொடர் முழுவதுமே சிறப்பாக விளையாடினோம். அதை கடைசி ஆட்டத்திலும் செயல்படுத்தி வெற்றி கண்டோம். இந்த மைதானத்தில் இரவு நேரத்தில் சேசிங் செய்வது சிறந்தது என்று நினைத்தோம். எங்கள் வீரர்கள் களத்தில் சிறப்பாக செயல்பட்டனர். அனுபவமும், இளமையும் கலந்த அணியாக இருந்தது என்று அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பாட் கம்மின்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியா 300 ஓட்டங்கள் எடுத்தால் கூட அதை எங்களால் துரத்தி வெற்றி காண முடியும் என்று நினைத்தோம். லபுஷேனும், டிராவிஸ் ஹெட்டும் அமைதியாக விளையாடி அருமையான வெற்றியைக் கொடுத்துள்ளனர். டிராவிஸ் ஹெட்டை, தேர்வுக் குழுவினர் தேர்வு செய்ததற்கு நியாயம் சேர்த்துள்ளார். நான் பந்துவீசும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன். இன்றிரவு என்ன நடந்தாலும் அது ஒரு சிறப்பான தருணம். இந்த ஆண்டு நீண்ட காலமாக நினைவில் வைக்கப்படும் என்றார்.

### கபில்தேவும், டிராவிஸ் ஹெட்டும்:

இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா அடித்த பந்தை, வெகுதூரம் பின்னோக்கி ஓடிச் சென்று பாய்ந்து பிடித்து அவுட்டாக்கினார் டிராவிஸ் ஹெட். 1983இல் இந்திய அணியின் தலைவர் கபில்தேவ், மேற்கு இந்தியத் தீவு வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ் அடித்த பந்தை வெகு தூரம் பின்னோக்கி ஓடிச் சென்று பிடித்து அவுட்டாக்கினார். இது கபில்தேவின் பிடித்த கேட்ச்சை கண் முன் கொண்டுவந்தது.

### ஆடுகளத்துக்குள் புகுந்த நபர்:



உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் இந்திய அணி பேட்டிங் செய்து கொண்டிருந்த போது 14 ஓவரில் திடீரென பார்வையாளர் ஒருவர் மைதானத்திற்குள் நுழைந்தார்.
பாலஸ்தீன கொடி இடம்பெற்ற முகக் கவசமும், பாலஸ்தீன விடுதலை, பாலஸ்தீனம் மீது குண்டுவீசுவதை நிறுத்துங்கள் ஆகிய வாசகங்கள் இடம்பெற்ற டி சர்ட்டுடனும் கையில் கொடியுடனும் அவர் காட்சியளித்தார். மைதானத்துக்குள் நுழைந்த அவர், விராட் கோஹ்லி அருகே சென்று அவர் தோள் மீது கை போட்டபடி நின்றார். இதையடுத்து, மைதான அதிகாரிகள் விரைந்து வந்து அந்த நபரை பிடித்து பொலிஜாரிடம் ஒப்படைத்தனர்.

### கேப்டனாக அதிக ரன்:

உலகக் கோப்பையில் அதிக ஓட்டங்கள் குவித்த தலைவர்கள் வரிசையில் ரோஹித் சர்மா முதலிடம் பிடித்தார். அவர் இந்த உலகக் கோப்பையில் மொத்தம் 581 ஓட்டங்கள் குவித்து முதலிடத்தில் உள்ளார்.

### ஒரே இலக்கு:

இந்திய அணி முதலில் பேட்டிங் செய்து அவுஸ்திரேலிய அணிக்கு 241 ரன்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது. 2019ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பை போட்டியிலும் இதே ஓட்டங்கள்தான் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் 11ஆவது ஓவருக்குப் பிறகு இந்திய வீரர்கள் சிக்ஸர்கள் விளாசவே இல்லை. இந்தத் தொடரில் 11ஆவது ஓவர் முதல் 40ஆவது ஓவர் வரை இந்திய வீரர்கள் சிக்ஸர் விளாசாமல் இருந்தது இந்தப் போட்டியில்தான்.

இந்திய அணி பேட்டிங் செய்தபோது 16ஆவது ஓவரிலிருந்து 26ஆவது ஓவர் வரை 8 பந்துவீச்சாளர்களை மாற்றி மாற்றி பந்துவீசச் செய்தார் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பாட் கம்மின்ஸ். ஆடம் ஸம்பா, கம்மின்ஸ், மேக்ஸ்வெல், ஹேசில்வுட், மிட்செல் மார்ஷ், ஹேசில்வுட், டிராவிஸ்ட ஹெட், ஸ்டார்க், மேக்ஸ்வெல், ஸம்பா ஆகியோர் மாறி மாறி பந்து வீசினர்.



### ரன் குவிப்பில் கோஹ்லி 2ஆவது இடம்:

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்திய அணி கிரிக்கெட் அணியின் நட்சத்திர பேட்ஸ்மேனான விராட் கோஹ்லி 3 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது உலகக் கோப்பை கிரிக்கெட் வரலாற்றில் அதிக ஓட்டங்கள் குவித்தவர்களின் பட்டியலில் ரிக்கி பாண்டிங்கை (1,743 ஓட்டங்கள்) பின்னுக்குத் தள்ளி 2ஆவது இடத்தைப் பிடித்தார். 54 ரன்களில் ஆட்டமிழந்த விராட் கோலி உலகக் கோப்பை தொடர்களில் ஒட்டுமொத்தமாக 1,795 ரன்களை குவித்துள்ளார். இந்த வகை சாதனையில் சச்சின் டெண்டுல்கர் (47 போட்டிகளில் 2,278 ஓட்டங்கள்) முதலிடத்தில் உள்ளார்.

### பவுண்டரி கொடுக்காத கம்மின்ஸ்..

உலகக் கோப்பைத் தொடரில் இந்த ஆட்டத்தில் 10 ஓவர்கள் பந்துவீசி ஒரு பவுண்டரி கூட விட்டுக் கொடுக்காமல் இருந்த முதல் வேகப்பந்து வீச்சாளர் என்ற சாதனையை ஆஸ்திரேலியாவின் தலைவர் பாட் கம்மின்ஸ் செய்துள்ளார். இந்த உலகக் கோப்பை தொடரில் ஒரு பந்துவீச்சாளர், 10 ஓவர்கள் பந்துவீசி ஒரு பவுண்டரி கூட விட்டுக்கொடுக்காமல் இருந்த நிகழ்வு 8 முறை நடைபெற்றுள்ளது. இதில் பாட் கம்மின்ஸ் மட்டுமே வேகப்பந்து வீச்சாளர். மற்ற அனைவரும் சுழற்பந்து வீச்சாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### சொன்னதை செய்த கம்மின்ஸ்:

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு முந்தைய பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போது அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பாட் கம்மின்ஸ், "மைதானத்துக்கு வரும் 1.30 இலட்சம் பார்வையாளர்களும் இந்திய அணி வெற்றி பெற வேண்டும் என்று உற்சாகப்படுத்துவார்கள். அவர்களை அமைதியாக்குவதே எங்கள் இலக்கு" எனத் தெரிவித்தார். அவர், கூறிய இந்த சொல்லை இறுதிப் போட்டியின்போது செய்து காண்பித்தார். ரோஹித் சர்மா களத்தில் இருந்தவரை ஆரவாரம் செய்த ரசிகர்கள் அவர், ஆட்டமிழந்த பின்னர் அமைதியானர்கள். ஏனெனில் ரோஹித் சர்மா ஆட்டமிழந்த பின்னர் அடுத்த ஓவரிலேயே ஷ்ரேயஸ் ஐயர் நடையை கட்டினார். இதைத் தொடர்ந்து இந்திய அணி அடுத்த 97 பந்துகளில் ஒரு பவுண்டரிகூட அடிக்கவில்லை. மாறாக சீரான இடைவெளியில் விக்கெட்களையும் பறிகொடுத்தது.

### போட்டியை நேரில் பார்த்த பிரதமர் மோடி:

இறுதிப் போட்டியை காண பிரதமர் மோடி, அகமதாபாத் சென்றிருந்தார். மைதானத்தில் அமைச்சர் அமித் ஷாவுடன் அமர்ந்து போட்டியை பார்த்தார். தொடர்ந்து வெற்றிக் கோப்பையை அவுஸ்திரேலிய துணை பிரதமருடன் இணைந்து கம்மின்ஸ் வசம் வழங்கினார்.

நன்றி: த ஹிந்து

# ஆறாவது தடவையாக சம்பியனான அவுஸ்திரேலியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில் ஆறாவது தடவையாக அவுஸ்திரேலியா சம்பியனாகியது.

இந்தியாவில் நடைபெற்று வந்த 13ஆவது தொடரில், அஹமதாபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தியாவுடனான இறுதிப் போட்டியில் வென்றே அவுஸ்திரேலியா ஆறாவது தடவையாக சம்பியனாகியது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பற் கமின்ஸ், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்தியா வேகமான ஆரம்பத்தைப் பெற்றபோதும் ஆரம்பத்திலேயே ஷுப்மன் கில்லை மிற்செல் ஸ்டார்க்கிடம் இழந்தது. பின்னர் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் றோஹித் ஷர்மாவுன் 47 (31) ஓட்டங்களுடன் கிளென் மக்ஸ்வெல்லிடம் வீழ்ந்ததுடன், அடுத்து வந்த ஷ்ரேயாஸ் ஐயரும் உடனேயே கமின்ஸிடம் வீழ்ந்தார்.

இந்நிலையில், இக்கட்டான நிலையிலிருந்த இந்தியாவின் இனிங்ஸை விராட் கோலி, லோகேஷ் ராகுலின் இணைப்பாட்டம் நகர்த்திச் சென்றபோதும் கோலி 54 (63) ஓட்டங்களுடன் கமின்ஸிடம் வீழ்ந்தார். சிறிது நேர இடைவேளைகளில் இரவீந்திர ஜடேஜா ஜொஷ் ஹேசில்வூட்டிடம் வீழ்ந்ததோடு, 66 (107) ஓட்டங்களுடன் ராகுலும் ஸ்டார்க்கிடம் வீழ்ந்தார்.



பின்னர் வரிசையாக ஸ்டார்க், அடம் ஸாம்பா, ஹேசில்வூட்டிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்த இந்தியா 50 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 240 ஓட்டங்களையே பெற்றது.

பதிலுக்கு 241 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா ஆரம்பத்தில் டேவிட் வோர்னர், மிற்செல் மார்ஷ், ஸ்டீவன் ஸ்மித்தை மொஹமட் ஷமி, ஜஸ்பிரிட் பும்ராவிடம் (2) பறிகொடுத்து தடுமாறியது.

எனினும், ட்ரெவிஸ் ஹெட்டுடன் ஜோடி சேர்ந்த மர்னுஸ் லபுஷைனின் இணைப்பாட்டம் காரணமாக 43 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில், அவுஸ்திரேலியா வெற்றியிலக்கையடைந்தது.

ஹெட் 137 (120), மர்னுஸ் லபுஷைன் ஆட்டமிழக்காமல் 58 (110) ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக ஹெட்டும், தொடரின் நாயகனாக கோஹ்லியும் தெரிவாகினர்.



## இரண்டாவது முறையாக

அவுஸ்திரேலியாவானது ஆறாவது முறையாக சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ள நிலையில், டேவிட் வோர்னர், ஸ்டீவன் ஸ்மித், கிளென் மக்ஸ்வெல், ஜொஷ் ஹேசில்வூட், மிற்செல் ஸ்டார்க், பற் கமின்ஸ், மிற்செல் மார்ஷ் ஆகியோர் இரண்டாவது தடவையாக உலகக் கிண்ணத்தை வென்றுள்ளனர்.

கடந்த 2015ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா உலகக் கிண்ணத்தை வென்ற அணியில் டேவிட் வோர்னர், ஸ்டீவன் ஸ்மித், கிளென் மக்ஸ்வெல், மிற்செல் ஸ்டார்க், ஜொஷ் ஹேசில்வூட் ஆகியோர் விளையாடியிருந்ததுடன், பற் கமின்ஸ் மற்றும் மிற்செல் மார்ஷ் ஆகியோர் அவுஸ்திரேலியக் குழாமில் காணப்பட்டிருந்தனர்.

## அரவிந்தவை முந்திய ஹெட்

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிகளின் துரத்தியெடுப்புகளில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றிருந்த இலங்கை அணியின் முன்னாள் ஜாம்பவனான அரவிந்த டி சில்வாவின் சாதனையை நேற்று முன்தினம் நடைபெற்ற உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவின் ட்ரெவிஸ் ஹெட் முறியடித்தார்.

கடந்த 1996ஆம் ஆண்டு இலங்கையணி சம்பியனானபோது டி சில்வா, அவுஸ்திரேலியாவுக்கெதிராக ஆட்டமிழக்காமல் 107 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், ஹெட் 137 ஓட்டங்களை இப்போட்டியில் பெற்றிருந்தார்.

தவிர அரையிறுதிப் போட்டியிலும், இறுதிப் போட்டியிலும் சேர்த்து 199 ஓட்டங்களை ஹெட் பெற்றிருந்த நிலையில், இதற்கு முன்னர் 1979ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் அரையிறுதிப் போட்டியிலும், இறுதிப் போட்டியிலும் சேர்த்து 180 ஓட்டங்களை விவியன் றிச்சர்ட்ஸ் பெற்றிருந்தமை அதிகபட்சமாக இருந்தது.



## அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவராக ஷமி

சர்வதேச கிரிக்கெட் சபையின் 13ஆவது உலகக் கிண்ணத் தொடரில் அதிகபட்சமாக 24 விக்கெட்டுகளை இந்தியாவின் மொஹமட் ஷமி வீழ்த்தியுள்ளார்.

இந்தியாவின் முதல் நான்கு போட்டிகளிலும் விளையாடியிருக்காத ஷமி, ஏழு இனிங்ஸ்களில் 10.70 என்ற சராசரியிலேயே இந்த விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

இரண்டாமிடத்தில் 23 விக்கெட்டுகளுடன் அவுஸ்திரேலியாவின் அடம் ஸாம்பாவும், மூன்றாமிடத்தில் 21 விக்கெட்டுகளுடன் இலங்கையின் டில்ஷான் மதுஷங்கவும் காணப்படுகின்றனர்.

இதேவேளை, இம்முறை தொடரில் இனிங்ஸொன்றின் சிறந்த பெறுதியையும் ஷமியே கொண்டிருக்கிறார். நியூசிலாந்துக்கு எதிரான அரையிறுதிப் போட்டியில் 9.5 ஓவர்கள் பந்துவீசி 57 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 7 விக்கெட்டுகளை ஷமி வீழ்த்தியிருந்தார்.



> "13ஆவது உலகக் கிண்ணத் தொடரில் அதிகபட்சமாக 24 விக்கெட்டுகளை வீழ்த்தி இந்தியாவின் மொஹமட் ஷமி சாதனைப்படைத்துள்ளார்

## மக்ஸ்வெல் மாயாஜாலம்



முடிவடைந்த சர்வதேச கிரிக்கெட் சபையின் 13ஆவது உலகக் கிண்ணத் தொடரில் போட்டியொன்றில் அதிகபட்சமாக அவுஸ்திரேலியாவின் கிளென் மக்ஸ்வெல் ஆட்டமிழக்காமல் 201 (128) ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

ஒருநாள் சர்வதேசப் போட்டி வரலாற்றின் மிகச் சிறந்த இனிங்ஸாகக் கருதப்படும் குறித்த இனிங்ஸை ஆப்கானிஸ்தானுக்கெதிரான லீக் போட்டியில் 292 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடும்போது அவுஸ்திரேலியா 18.3 ஓவர்களில் 91 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்த பிற்பாடே மக்ஸ்வெல் பெற்றிருந்தார்.

இதேவேளை, மக்ஸ்வெல்லுக்கு அடுத்ததாக பங்களாதேஷுக்கெதிரான லீக் போட்டியில் அவுஸ்திரேலியாவின் மிற்செல் மார்ஷ் ஆட்டமிழக்காமல் 177 (132) ஓட்டங்களைப் பெற்றிருந்ததுடன், மூன்றாமிடத்தில் குயின்டன் டி கொக்கும் பங்களாதேஷுக்கெதிரான லீக் போட்டியில் 174 (140) ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 21 நவம்பர் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.